Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 305 | சனிக்கிழமை | புரட்டாதி 16 ஆம் நாள் 02 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்:16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

முச்சந்தி முரளி



அப்ப காசுக்காகத்தான் நாட்டை உவையள் திறந்திருக்கினம் பணத்துக்கு முன்னால கொரோனாவாவது கோதாரியாவது

# வடக்கில் துக்கநாளானது சிறுவர் தினம்!

## வடக்கு- கிழக்கு உறவுகள் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், ஒக். 2

"இறந்து போனவர்களுக்காக நாம் போராடவில்லை. உயிரோடு உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்காகவே போராடுகிறோம்." என்று தெரிவித்த காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், நேற்றைய சிறுவர் தினத்தை துக்கதினமாகக் கடைப்பிடித்து வடக்கு- கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**யாழ்ப்பாணம்**

ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகரின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 9.15 அளவில் 15

## சாவு 58 தொற்று 893

கொழும்பு, ஒக். 2

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 58 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் 15

### ஊரடங்கை நீக்கக்காரணம்

# கொரோனா அடங்கியதாலல்ல: பொருளாதாரச் சிக்கலாலேயே!

## இராணுவத் தளபதி அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஒக்ரோபர் 2

"இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் இன்னமும் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. பொருளாதாரப் பிரச்சினைகளால் நாட்டைத் தொடர்ந்தும் முடக்க முடியாத நிலை ஏற்பட்டதாலேயே ஊரடங்குச் சட்டத்தை நீக்கினோம். மருத்துவ நிபுணர்களின் கூற்றின்படி மக்கள் பொறுப்பற்ற முறையில் செயற்பாட்டால் மீண்டும் கொரோனாவின் பேராபத்தை நாடு எதிர்கொண்டே தீரும்." 15

## உசனில் விபத்து: ஒருவர் உயிரிழப்பு



கொடிகாமம், ஒக். 2

தென்மராட்சி, உசன் சந்தியில், பட்டாரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களில் ஒருவர் உயிரிழந்தார். அவருடன் பயணித்தவர் 15

## வெவ்வேறு தன்மைகளுடன் வீரியமான வைரஸ் பரவலாம்

கொழும்பு, ஒக். 2

"டெல்டா வைரஸ் பரவலே நாட்டில் காணப்படுகின்றது. ஆகவே, டெல்டா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் நாடு பாதுகாப்பாக இருக்கின்றது என ஒரு போதும் கூறமுடியாது. மேலும் வெவ்வேறு வடிவங்களில் வேறு தன்மைகளில் 15

## முன்னாள் போராளிகளிடம் தகவல் சேகரிக்கும் படைகள்

யாழ்ப்பாணம், ஒக். 2

முன்னாள் போராளிகளைத் தொடர்புகொள்ளும் இராணுவத்தினர், அவர்களுடைய பெயர் விவரங்களை சேகரித்து வருகின்றனர்.

எங்கே? என்ன வேலை செய்கிறீர்கள்? 14

### அத்தியாவசியமற்ற

## பொருள்கள் இறக்குமதிக்கான தடையை நீக்கியது மத்திய வங்கி

கொழும்பு, ஒக். 2

அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி விதித்திருந்த உத்தரவாத வைப்பு கட்டுப்பாடுகளை, உடன் நடைமுறைக்கு வரும்வகையில் நீக்க முடிவு 10

## இந்திய வெளிவிவகார செயலர் வடக்கு, கிழக்குக்கும் பயணம்

கொழும்பு, ஒக். 2

இலங்கைக்கு மூன்று நாள் பயணமாக இன்று வருகை தரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் ஹர்சன் வர்த்தன் சிறிங்லா, 14

## வடக்குக்கு முதல் தடவையாக 276 மருத்துவர்கள் நியமனம்!!!

யாழ்ப்பாணம், ஒக். 2

வடக்கு மாகாணத்துக்கு முதல் தடவையாக 276 மருத்துவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தீவிர முயற்சியின் பலனாக, இந்தவருடம் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த276 மருத்துவர்களுக்கான நியமனத்தில் வடக்கு மாகாண 14

## வாள்களை விட்டு தப்பியோடிய குழு



யாழ்ப்பாணம், ஒக். 2

தாக்குதலுக்குத் தயாரான குழுவொன்று இராணுவத்தைக் கண்டதும் வாள் மற்றும் கூரிய ஆயுதங்களைக் 13

## ஓய்வூதியம் வழங்க அரசிடம் பணமிராது

### எதிர்வுகூறுகின்றார் ரணில்

கொழும்பு, ஒக். 2

ஓய்வூதியம் வழங்க அரசிடம் பணம் இருக்காத நிலை விரைவில் வரும் என்று ஐக்கிய 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார வழிகாட்டடல்கள்

# உரிய வகையில் பின்பற்றப்படுகின்றனவா மிகவும் தீவிரமாக கண்காணியுங்கள்

கொழும்பு, ஒக். 2

நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில், உரிய சுகாதார வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில், அந்தந்தத் துறையினர் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று, கொரோனா ஒழிப்புச் செயலணி வலியுறுத்தியுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர், பொதுமக்கள் ஒன்றுகூடும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். அதனால், மீண்டும் கொவிட் தொற்றுப் பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தாதிருக்க, சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவது கட்டாயமென்று, சுகாதாரத் தரப்பு சுட்டிக்காட்டியது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தலைமையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

வீடியோ தொழில்நுட்பத்தினூடாக இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின் போது, அரச மற்றும் தனியார் துறையினரைப் பணிக்கு அழைப்பது மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்களை, தற்போது வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், பயணிகளின் தேவைக்கேற்ப, பஸ்கள் மற்றும் ரயில்களை, போதியளவில் சேவையில் ஈடுபடுத்த, போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

நாட்டின் மொத்தச் சனத்தொகையில், 30 வயதுக்கு மேற்பட்டோரில் சுமார் 95 சதவீதமானோருக்கு, இரண்டு அலகு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளன. 20 முதல் 30 வயதுக்கிடைப்பட்டவர்கள் மற்றும் விசேட தேவையுடைய 12 முதல் 19 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டங்களும், தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தடுப்பூசி ஏற்றல் தொடர்பான விரிவான கணக்கெடுப்பொன்றை நடத்துவதற்கும், கொரோனா ஒழிப்புச் செயலணி தீர்மானித்துள்ளது.

சுற்றுலா மற்றும் பொருளாதாரத் துறைகளின் மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பிலும், இந்தக் கூட்டத்தின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (ஒ-5)

# மனித உரிமைச் சுட்டெண்ணை ஐ.ஒன்றியம் ஆராயவேண்டும்

சிவில் அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 2

இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு முன் இலங்கை அரசின் மனித உரிமைச் சுட்டெண்ணை நன்கு ஆராய வேண்டும் என்று வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய (ஈ.யூ.) பிரதிநிதிகள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். பல தரப்பினரையும் சந்தித்திருந்தனர். ஐரோப்பிய ஒன்றியத்தினர் சந்திக்காத, வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளே மேற்படி கோரிக்கையை ஊடக சந்திப்பு நடத்தி நேற்று விடுத்தனர்.

ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

ஐரோப்பிய ஒன்றியத்தால் ஒரு நாட்டுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு முன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள 27 நிபந்தனைகளுக்கு அந்த நாட்டு அரசு இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

ஆனால் இலங்கை அரசு கடந்த 10 ஆண்டுகளாக சிறுபான்மை மக்களின் குறிப்பாக தமிழ் மக்களின் மனித உரிமைகள் விடயத்தில் விட்டேத்தியாகவே நடக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படாமை என்று பல்வேறு பிரச்சினைகள் இன்றும் தொடர்கின்றன.

இவ்வாறான நிலையில் இலங்கை அரசுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்குவதற்கு முன்னர் குறித்த விடயங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டும், என்று கோரினர். (ஒ-20)

## மஞ்சள் மூடைகள் மீட்பு

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக மஞ்சள் மூடைகள் அதிகளவில் கைப்பற்றப்பட்டு வருகின்றன. நேற்றைய தினம் அனலைதீவிலும், நேற்றுமுன்தினம் வெற்றிலைக்கேணியிலும இருந்து மஞ்சள் மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அனலைதீவில் 20 மஞ்சள் மூடைகளை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில், நாவற்குழி மற்றும் அனலைதீவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட மஞ்சள் மூடைகள் வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று கடற்படையினர் குறிப்பிட்டனர்.

அதேவேளை வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 322 கிலோ கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ.6,26)

## சந்தை கையளிப்பு

கரைச்சி பிரதேச சபையால் 2.54 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வட்டக்கச்சி பொதுச்சந்தை மக்கள் பாவனைக்கு நேற்றைய தினம் கையளிக்கப்பட்டது. நெல்சிப் திட்டத்தினூடாக பொதுச்சந்தை முன்னர் அமைக்கப்பட்டிருந்தது. சந்தைத் தொகுதி விற்பனைக்கு உகந்த முறையில் இல்லாமையால் வியாபாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு தெரியப்படுத்தினர். அவரது அறிவுறுத்தலுக்கு அமைவாக கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளரால் மேற்படி சந்தை நவீனமயப்படுத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

# இடர்கால கொடுப்பனவு கிடைக்கவில்லை பணிப்புறக்கணிப்புக்குச் செல்ல நேரிடும்

மருத்துவர்கள் எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஒக். 2

கொரோனா இடர்காலத்துக்குரிய மேலதிகக் கொடுப்பனவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியபோதும் கடந்த சில மாதங்களாக அந்தக் கொடுப்பனவு முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை மருத்துவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படவில்லை என்றும் ஒரு வாரத்துக்குள் இதற்குச் சாதகமான தீர்வு வழங்கப்படாவிட்டால் அடையாள பணிப்புறக்கணிப்புக்குச் செல்லவேண்டி வரும் என்று முல்லைத்தீவு மாவட்ட பொதுமருத்துவமனை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவில் முழு மாவட்டத்துக்குமான நோயாளிகளின் விசேட மருத்துவ நிபுணர் சேவையை முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை மட்டுமே வழங்கி வருகின்றது.

பொது மருத்துவம், சத்திர சிகிச்சை, குழந்தை மருத்துவம், பெண்ணியல் மற்றும் மகப்பேற்று மருத்துவம் ஆகிய ஒவ்வொரு விசேட துறையிலும் இரண்டு நிரப்பிடங்கள் காணப்படுகின்றன.

இறுதியாக சேவையிலிருந்த ஒரேயொரு சத்திரசிகிச்சை நிபுணரும் ஒரு மாதத்துக்கு முன்னர் மேலதிக கற்கைநெறிக்காக வெளிநாடு சென்றுவிட்டார். அன்றிலிருந்து இன்றுவரை வேறு ஒரு சத்திர சிகிச்சை நிபுணரும் பிரதியிடு செய்யப்படவில்லை. கடந்த இரு வாரங்களாக வட மாகாணத்தின் பிற மாவட்டங்களிலிருந்து சத்திரசிகிச்சை நிபுணரை பெற்றுக்கொள்வதற்கு இடர்பாடுகளை சந்தித்து வருகின்றோம்.

அத்துடன் கடந்த ஆறு மாத காலமாக கதிரியக்க வைத்திய நிபுணர் இல்லாத துர்ப்பாக்கிய நிலையம் காணப்படுகின்றது. இது மற்றைய துறைகளின் வினைத்திறனான சேவைக்கு இன்றியமையாததாகும்.

மற்றும் என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர், மனநல மருத்துவ நிபுணர் எமது மருத்துவமனைக்கு இதுவரை நியமிக்கப்படவில்லை.

எமது மருத்துவமனை மாவட்ட பொது வைத்தியசாலையாக காணப்படுகின்ற போதும் மற்றைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது குறைந்தளவான விசேட மருத்துவ நிபுணர்களே நியமிக்கப்படுகின்றார்கள்.

தற்போதைய நிலையில் விசேட மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையால் நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதன்போது ஏறத்தாழ 1.5 - 2 மணித்தியாலம் பயணம் செய்யவேண்டியிருக்கின்றது. இது நோயாளி சிறந்த சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு காலதாமதமாவதுடன் நோயாளியின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட ஏதுவாகின்றது. இங்கு வாழ்கின்ற ஏராளமான மக்கள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களாகையால் போக்குவரத்து வசதியின்மையால் தமது தொடர்ச்சியான சிகிச்சையை பெற்றுக்கொள்ளாமல் நிறுத்திக்கொள்கின்றனர்.

இவ்விடயங்கள் தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உமாசங்கர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பு சேவைகள் பணிப்பாளர் கருணாரத்ன ஆகியோருக்கு பல தடவைகள் அறிவித்தபோதும் சாதகமான பதில் ஏதும் கிடைக்கபெறவில்லை.

தற்போது மாவட்ட பொது மருத்துவமனைக்காக நியமிக்கப்படவேண்டிய மருத்துவர்களின் எண்ணிக்கை 70 ஆக காணப்படுகின்ற போதும் 35 மருத்துவர்களே பணியாற்றுகிறார்கள். எனினும் கொரோனா தொற்று நோய்க் காலத்தில் எம்மால் இயன்றளவு சிறந்த சேவையை வழங்கி வருகின்றோம்.

அத்தோடு அமைச்சரவை சுற்றறிக்கையில் கொரோனா காலத்துக்கான மேலதிக கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்ட போதும் கடந்த சில மாதங்களுக்கான கொடுப்பனவு எமது மாவட்ட மருத்துவமனையில் மட்டும் வழங்கப்படவில்லை. இன்னும் ஒரு வாரத்துக்குள் இது சம்பந்தமாக தீர்வு கிடைக்காவிடில் நாம் அடையாளப் பணிப்புறக்கணிப்புக்குச் செல்ல வேண்டியதாயிருக்கும்.

நோயாளிகளின் உயிர்களை நிர்க்கதிக்குள்ளாக்காமல் இப்பிரச்சினைகள் அனைத்துக்குமான தீர்வுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய விரைவில் பெற்றுத்தருவார்கள் என நம்புகின்றோம் - என்றுள்ளது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி அட்டைச் சோதனைகள் மன்னாரில் நேற்று முன்னெடுப்பு

**மன்னார், ஒக்.2**

**மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக்கொண்டமையை உறுதி செய்யும் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. தடுப்பூசி அட்டைகள் பரிசீலிக்கப்பட்டன.**



பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

நாட்டில் கடந்த 41 நாள்களாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நேற்று அதிகாலை 4 மணி முதல் தளர்த்தப்பட்டுள்ளது. மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளனர்.

மாவட்டத்தின் சகல சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் பணியாளர்கள், பொதுப் போக்குவரத்து சேவையை மேற்கொள்ளும் பயணிகள், பணியாளர்கள் மற்றும் வாடகைப் போக்குவரத்தை மேற்கொள்ளும் பணியாளர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி பெற்றுக் கொண்டமையை உறுதி செய்யும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய சுகாதாரத் துறையால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமைக்குப் பின்னர் தடுப்பூசி ஏற்றாது இருப்பவர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படும் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-56)

## குறைந்தளவு மாணவர்களுள்ள பாடசாலைகள் ஆரம்பமாகும்

*வவு. மேலதிக மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

வவுனியா, ஒக். 2

வவுனியாவில் குறைந்தளவான மாணவர்களை உள்ளடக்கிய 114 பாடசாலைகளை விரைவாகத் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று வவுனியா மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் தெரிவித்தார்.

கொரோனா சமகால நிலைமை தொடர்பாக வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது வவுனியாவில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 72 வீதமானவர்களுக்கு இரு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளன. 29 தொடக்கம் 59 வயதான 58 வீதமானவர்களுக்கு இரு தடுப்பூசிகளும், 18 முதல் 29 வயதுக்குட்பட்ட 28 வீதமானவர்களுக்கு தடுப்பூசியின் ஒரு டோஸும் செலுத்தப்பட்டுள்ளன. இந்த மாத இறுதிக்குள் முழுமையாகத் தடுப்பூசிகளை வழங்குவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

வவுனியா மாவட்டத்தில் 7 ஆயிரத்து 125 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 200 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 70 வீதமானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். வவுனியா மாவட்டத்தில் 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 114 பாடசாலைகள் உள்ளன. அவற்றைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. தடுப்பூசி செலுத்தாமல் வெளியில் நடமாடுவோர் மீது சுகாதாரப் பிரிவினரது பங்களிப்புடன் சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பது தொடர்பான முறைமை ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆயினும் தீர்மானம் எவையும் எடுக்கப்படவில்லை - என்றார். (எ-110)



## 4 கால்களுடன் கோழிக்குஞ்சு

நான்கு கால்களுடன் பிறந்த கோழிக்குஞ்சு அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. அம்பாறை மாவட்டம் கல்முனைப் பிரதேசத்தின் கடற்கரைப்பள்ளி வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் இந்த அரிய சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அடைகாக்க வைக்கப்பட்ட முட்டைகளிலிருந்து ஏழு கோழிக்குஞ்சுகள் பிறந்துள்ள நிலையில், அதில் ஒன்றுக்கு நான்கு கால்கள் உள்ளன என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ம-4)

## சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும்காலம் நீடிப்பு

கொழும்பு, ஒக். 2

சகல சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

அதற்கமைவாக ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து 2022 மார்ச் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் காலாவதியாகவுள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4)

## புதினம் தெரியுமோ

வல்வெட்டித்துறை நகரசபையில பெரும் இழுபாட்டுக்கு பிறகு சுயேச்சையாகக் கேட்டு,போனஸ் சீற்றில வந்த செல்வேந்திரா நகரசபைத் தவிசாளரானது எல்லாருக்கும் தெரிஞ்ச சங்கதி. ஆனால் அவர் தவிசாளராகிறதுக்கு முதலும், பிறகும் நடந்த சங்கதியளைக் கேட்டால தலைசுத்தும்.

செல்வேந்திரா அந்தக் காலத்தில இருந்து தமிழ்த் தேசியத்தில இருந்து மாறாத ஓர் ஆள். சனத்திட்டையும் நல்ல செல்வாக்கு இருக்கு. போன எலக்சனில அவைக்கு கூட்டமைப்பில இடம் குடுக்கேலை. அதால சுயேச்சையாய் நிண்டவை. இந்தச் சுயேச்சைக்கு பின்னால நிண்டு இயக்கினவர் அனந்தராஜ் எண்டும் கேள்வி.

சுயேச்சையாய் நிண்டாலும் அவைக்கு முந்தின வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்ர கட்சி சப்போர்ட் பண்ணினது. அந்த நேரத்தில சிவாஜிலிங்கம், தனக்குச் சார்பான ஆக்களை ரெலோ சார்பாக கூட்டமைப்பில இறக்கி , எலக்சன் கேக்க வைச்சார். தனக்கு சார்பா இருந்த கருணானந்தராசாவை தவிசாளராகவும் ஆக்கினார். உப தவிசாளரும் அப்ப சிவாஜின்ர ஆள் தான்.

அந்த நேரத்தில தன்னைத் தவிசாளர் ஆக்கேலை எண்டு ரெலோ சார்பில உறுப்பினராகத் தெரிவான சதீஷ் கோபிச்சுக் கொண்டு, சுயேச்சைக் குழுவான செல்வேந்திரா அணியின்ர பக்கம் நிண்டார். முந்தி நடந்த தவிசாளர் தெரிவில கருணானந்தராசாவை எதிர்த்து செல்வேந்திரா தான் போட்டி போட்டவர். அப்ப இதே சதீஷ், தன்னை ஓரங்கட்டிப் போட்டினம் எண்டதுக்காக செல்வேந்திரா அணியோடதான் நிண்டவர். குறிப்பாக கருணானந்தராசா கொண்டுவாற திட்டங்களை செல்வேந்திரா அணியோட சேர்ந்து, எப்படித் தடுக்கலாம் எண்டதில சதீஷ் காட்டின தீவிரத்தைச் சொல்ல வார்த்தையில்லை.

இந்த நிலையில கருணானந்தராசா எதிர்பாராதவிதமாக உயிரிழக்க, அவரின்ர இடத்துக்கு ஆரைப் போடுறது எண்ட கேள்வி வந்திச்சு. அப்பதான் எங்கட சட்டாம்பி எம்.பி களத்துக்க புகுந்து , தன்ர ஆளை போடோணும் எண்டு விடாப்பிடியாக நிண்டார். முந்தின முனிசிபல் மேயராக தான் நினைச்ச ஆர்னல்டைக் கொண்டந்த மாதிரி, இந்த இடத்துக்கும் தன்ர விசுவாசியைக் கொண்டந்தால், தான் நினைச்சபடி நகரசபையை ஆட்டிப்படைக்கலாம் எண்டது சட்டாம்பியாரின் எண்ணம். ஆனால் கட்சிக்குள்ள இல்லாட்டியும் சிவாஜிக்கு அங்க செல்வாக்கு கூட. அதால சிவாஜிலிங்கத்தின்ர ஆள் தான் கருணானந்தராசாவின் இடத்துக்கு வந்தார்.

இது சட்டாம்பியருக்கு கடும் கோபம்.

“என்ர முகத்தில கரி பூசின சிவாஜிக்கு நான் கரி பூசாமல் விடமாட்டன் எண்டு திட்டம் போட்டார்.இவ்வளவு காலமும் சிவாஜின்ர ஆளாய் இருந்த உப தவிசாளர், தன்னைத்தான் அடுத்த தவிசாளரா போடோணும் எண்டு நிக்கிறது. சட்டாம்பியாருக்கு தெரியவர, அவரை வைச்சே சிவாஜிலிங்கத்தின்ர கண்ணைக் குத்துறதெண்டு முடிவெடுத்தாச்சு. ஏனெண்டா சிவாஜி, இவ்வளவு காலமும் கொஞ்சம் விலத்தி நிண்ட சதீஷை தவிசாளராக்கி, திரும்ப தன்ரபக்கம் திருப்ப திட்டம் போட்டிருந்தார். அதைக் குழப்பிறதுதான் சட்டாம்பியாரின் பிளான்.

புதுத் தவிசாளரை தெரிவு செய்யிறதுக்கு முதல் நடந்த கூட்டத்தில செல்வேந்திரா அணியும் சதீஷைத்தான் சப்போர்ட் பண்ண இருந்தது. ஆனால், அண்டைக்கு கூட்டம் நடத்திறதுக்கு கோரமில்லை. அதால அண்டைக்கு கூட்டம் கான்சல். அதுக்கிடையில இருந்த காலத்தில சட்டாம்பியாரின் ஏற்பாட்டின்படி, செல்வேந்திராவோட கதைச்சு, அவையின்ர மனதை மாத்தி, அவரை போட்டியிட வைச்சிட்டினம். முதலே போட்ட பிளான் படி, தங்களுக்கு தவிசாளர் பதவி கிடைக்காட்டியும் பரவாயில்லை. ஆனால், சிவாஜிலிங்கத்தின்ர ஆதரவாளருக்கு சதீஷுக்கு கிடைக்கக் கூடாது எண்டதுக்காக, உப தவிசாளர் செல்வேந்திரா அணிக்கு வாக்களிக்க, அவர் தவிசாளராய் வந்திட்டார். செல்வேந்திராவுக்கு சனத்திட்டையும் நல்லபேர். தவிசாளர் பதவிக்கு பொருத்தமான ஆள் தான். ஆனால், தங்கட கட்சி ஆளை( கூட்டமைப்பு உறுப்பினரை) தாங்களே தோற்கடிச்சுபோட்டு, அதைப் பெருமையாய் ஊடகங்களுக்கும் சொல்லிக் காட்டினார் சட்டாம்பி. போதாக்குறைக்கு இதுக்கெல்லாம் பின்னால தானே நிண்டன் எண்டதைக் காட்டுறதுக்காக தவிசாளரான செல்வேந்திரா வீட்டுக்கு சட்டாம்பியார் தன்ர செம்புகள் சகிதம் விசிட் அடிச்சிருக்கிறார்.

செல்வேந்திரா என்னதான் இவையின்ர ஆதரவில பதவிக்கு வந்தாலும், கொள்கையுள்ள ஆள். எப்பவும் விக்னேஸ்வரனுக்குத்தான் என்ர ஆதரவெண்டு அவர் இப்பவும் சொல்லுறார். அப்பிடிப்பட்டவரை வீட்டை போய்ச் சந்திச்சால், மற்ற ஆக்கள் மாதிரி தன்ர பக்கம் விழுந்திடுவார் எண்டு கணக்குப் போட்டிருப்பார் போல சட்டாம்பியார். ஆனால் அது சரி வரேலை.

“எனக்கு எங்கட பிரதேச அபிவிருத்தி முக்கியம். ஆர் வந்தாலும் வரவேற்பன். ஆனால், நான் தேசிய அரசியல் எண்டு வந்தால் விக்னேஸ்வரன் ஐயாவைத்தான் ஆதரிப்பன் எண்டு அவைக்கு செல்வேந்திரா தெளிவாய் சொல்லிப் போட்டார். அதுக்குப் பிறகு கனவு பாழாய்ப்போன எம்.பியும் ஒருக்கா அருட்டிப் பாப்பமெண்டு , செல்வேந்திரா வீட்ட போயிருக்கிறார். அவருக்கும் மசியேலை ஆள். தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு சகுனப்பிழை வந்தாக் காணும் எண்ட சட்டாம்பியார் இப்ப எப்பிடி செல்வேந்திராவை தன்ரபக்கம் கொண்டுவாறதெண்டு தெரியாம முழிக்கிறாராம். அதுக்கிடையில இன்னொண்டும் சொல்லவேணும். உபதவிசாளராக இருந்த சிவாஜிலிங்கத்தின்ர ஆள், பிறகு சட்டாம்பி பக்கம் தாவினவரெல்லோ. அவர் சட்டாம்பியோட மட்டும் நிக்கேலையாம். பாழய்ப்போன கனவுக்கார எம்.பியோடதான் கூட மினக்கெடுறாராம். வாழத்தெரிஞ்ச ஜீவன்.

பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*20 மாதங்களில் மட்டும்*

# 125,747 கோடி ரூபா காசுத்தாள்கள் அச்சடிப்பு

கொழும்பு, ஒக். 2

**இலங்கையில் கடந்த 20 மாதங்களில் மட்டும் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 747 கோடி ரூபா பெறுமதியான நாணயத்தாள்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைக்கு அமைவாக, அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்டதன் பின்னர், இதுவரை 4 ஆயிரத்து 784 கோடி ரூபா நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன. 2019 ஆம் அண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், தனவந்தர்களுக்கு வரி நிவாரணத்தை வழங்கியதால் ஏற்பட்ட வருமான இழப்பை அடைத்துக் கொள்ள நாட்டின் டொலர் இருப்பை கடன் செலுத்தப் பயன்படுத்தியுள்ளனர். டொலர் இருப்பு இழக்கப்பட்டதால், எரிபொருள் இறக்குமதிக்காக டொலர் செலுத்துவதைக் கட்டுப்படுத்தியுள்ளது. டொலர் இழப்புக்கு பரிகாரமாக உரம், மருந்து, உணவுப் பொருள்கள், இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளிட்டவைகளின் இறக்குமதியை தடை செய்ய அரசுக்கு நேர்ந்துள்ளது. சர்வதேச நாணய நிதியம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஊடாக உதவிகளைப் பெறாமல், அரச சொத்துக்களை விற்பது, திறைசேரியை வெறுமையாக்குதல் போன்ற காரணங்களால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் மீண்டும் பாதாளத்திலேயே விழும். -என்றார். (ம-4)

## வெள்ளைப்பூண்டு விவகாரம் விசேட விசாரணை

கொழும்பு, ஒக். 2
சதொசவில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் வர்த்தக அமைச்சு தனி விசாரணையை ஆரம்பிக்கும் என்று அதன் செயலாளர் பத்ராணி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.
இரண்டு கொள்கலன்கள் நிரம்பிய 56 ஆயிரம் கிலோ வெள்ளைப்பூண்டை துறைமுகத்திலிருந்து 120 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து, வழமையான விற்பனையாளர்களுக்கு 135 ரூபாவுக்கு விற்ற பின்னர், அவர்களிடமிருந்து 445 ரூபாவுக்குக் கொள்வனவு செய்வதே சதொசவின் திட்டமாக இருந்தது.
எனினும் ஊடகங்கள் உண்மையை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து, சதொச வேறு வழியின்றி விநியோகஸ்தர்களுடனான உடன்படிக்கையை இரத்துச் செய்து, வெள்ளைப்பூண்டை தனது விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.
எனவே, சதொச வர்த்தக அமைச்சின் கீழ் வருவதால் வர்த்தக அமைச்சு இது குறித்து பதிலளிக்க வேண்டும். நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துசான் குணவர்த்தன தெரிவித்திருந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக சதொசவின் ஆரம்ப விசாரணை அறிக்கைகள் தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக அடுத்த சில நாள்களுக்குள் அமைச்சு தனது விசாரணையை ஆரம்பிக்கும் என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4)

## அரசின் முடிவுகளால் நாட்டுக்குப் பேரழிவு

*ரவி குமுதேஷ் எச்சரிக்கை*

கொழும்பு, ஒக். 2
கொரோனாத் தொற்றுக் காலத்தில், நாட்டில் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தருணத்தில், விமான நிலையங்களின் ஊடாக நாட்டுக்குள் நுழையும் பயணிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமை நாட்டுக்கு பேரழிவை ஏற்படுத்தும். இவ்வாறு சுகாதார தொழில் துறையின் நிபுணர் சங்கத்தின் தலைவரும், தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளருமான ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விமானப் பயணிகளை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தாது, நாட்டுக்குள் அனுமதிப்பது அறிவியல் அடிப்படையற்ற, தன்னிச்சையான முடிவாகும். இந்தத் தீர்மானம் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தால் எடுக்கப்பட்டதா? அல்லது எவராவது கழுத்தில் கத்தியை வைத்தமையால் எடுக்கப்பட்ட முடிவா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.
எவ்வாறாயினும், முழு நாட்டையும் பணயம் வைத்து எடுக்கப்பட்ட இந்த முடிவுக்கு, தொழில்நுட்ப ஆலோசனை வழங்கிய



குழுவின் ஆலோசனைகளை அம்பலப்படுத்த வேண்டும். கொரோனாத் தொற்று, தொற்றிக்கொள்ளல் அல்லது பரவுதலைத் தடுப்பதற்கு எந்தவிதமான தடுப்பூசிகளும் இன்று வரையிலும் கண்டுப்பிடிக்கப்படவில்லை. ஆகையால், தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டவர்கள் கொரோனாத் தொற்று அல்லாதவர்கள் என்று கருதி, எடுக்கப்பட்ட தீர்மானத்தில் பெரிய அபத்தம் உள்ளது.
தடுப்பூசியைத் தயாரிக்கும் நாடுகள் உட்பட உலகில் எந்த நாட்டுக்கும் தடுப்பூசி மீது அவ்வளவு நம்பிக்கை இல்லை. தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க நீண்ட கால பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய ஒரு நாடு, இவ்வாறான முடிவை எடுத்துள்ளமை நாட்டை பேரழிவுக்குள் தள்ளிவிடும் ஆபத்தை ஏற்படுத்தும். -என்றார். (ம-4)

## மூன்றாவது டோஸ் பைஸர் தடுப்பூசி

கொழும்பு, ஒக். 2
பைஸர் தடுப்பூசியை 3 ஆவது டோஸாக வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.
60 வயதுக்கு மேற்பட்டவர்கள், புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய்கள் போன்ற நாள்பட்ட நோய்கள் உடைய 30 தொடக்கம் 60 வயதுக்குட்பட்டவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு இந்த டோஸ் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## ரயில் போக்குவரத்து இரு வாரங்கள் தடை

கொழும்பு, ஒக். 2
நாட்டில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள போதும், இரண்டு வாரங்களுக்குள் எந்த ரயில்களும் சேவையில் ஈடுபடாது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.
அதேவேளை சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைவாக, அடுத்த இரண்டு வாரங்களுக்கு மாகாணங்களுக்கு இடையே பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
எனினும் அதன் பின்னர் வழமை போன்று மாகாணங்களுக்கு இடையே பஸ்கள் இயக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## அரச ஊழியர்களுக்கு மீண்டும் சுற்றறிக்கை

**கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு சலுகை**

கொழும்பு, ஒக். 2
நாட்டில் நடைமுறையில் இருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், அரச ஊழியர்களுக்கான புதிய சுற்றறிக்கை, பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.
அதற்கமைவாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் தொற்றா நோயுள்ள ஊழியர்களை பணிக்கு அழைக்கக்கூடாது. அவர்களை அத்தியாவசிய நேரத்தில் மாத்திரம் சேவைக்கு அழைக்க வேண்டும். எனினும், அவர்கள் பணிக்கு வருவதற்கும், மீண்டும் வீடு திரும்புவதற்கும் குறிப்பிட்ட காலம் ஒதுக்கப்பட வேண்டும்.
உரிய சுகாதார ஆலோசனையைப் பின்பற்றுவதன் மூலம் நிறுவன ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் சேவையை வழங்கும் பொறுப்பை நிறுவனங்களின் தலைவர்கள் ஏற்க வேண்டும்.
அதற்கமைவாக நிறுவனங்களின் தலைவர்கள் தங்கள் ஊழியர்களை குழுக்களாகப் பிரிப்பதற்கும், தேவைப்பட்டால், குழு உறுப்பினர்களின் செயற்பாடுகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்துவதற்கும், முடிந்தவரை பிரிவுகளுக்கு இடையேயான ஒன்று கூடலைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4)

## பூஜித, ஹேமசிறி மீது குற்றச்சாட்டுக்கள்



முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மீது, கொழும்பு மேல்நீதிமன்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.
இவர்கள் மீதான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்ட போது, இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களின்போது, தமது கடமைகளை அலட்சியம் செய்தனர் என்று இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறித்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ம-4)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெங்கை கட்டுப்படுத்த அனைவரும் முன்வரவும்!

## சுகாதாரத் திணைக்களம் அறிவிப்பு

**சாவகச்சேரி, ஒக். 2**

**தென்மராட்சி பிரதேசத்தில் மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் டெங்கு பரவாமல் தடுக்க காணிகள் மற்றும் குடியிருப்புக்களில் காணப்படும் நீர் ஏந்தும் பொருள்களை அகற்றி அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று - சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.**



அவர்கள் மேலும் தெரிவிக்கையில்: பிரதேச மக்கள் வழங்கிய ஒத்துழைப்பின் பயனாக இந்த வருடம் டெங்கின் தாக்கம் மிக குறைந்து காணப்படுகிறது. பொதுமக்கள் தமது குடியிருப்புக்கள் மற்றும் காணிகளில் சேரும் உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுப் பொருள்களை தனித்தனியாக பைகளில் இட்டு பாதுகாப்பாக வைத்திருந்து, உள்ளூராட்சி சபைகளின் கழிவுகள் அகற்றும் வாகனங்களில் ஒப்படைக்க வேண்டும்.

கடந்த வருடம் டெங்கால் பிரதேசத்தில் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். இதனால் தென்மராட்சி பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபைகள், பொலிஸார், படையினர் போன்றோர் வழங்கிய ஒத்துழைப்புடன் மக்களும் தமது ஆதரவை நல்கியதால் டெங்கின் தாக்கம் வீழ்ச்சியடைந்தது. மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் மக்கள் தமது பங்களிப்பை வழங்கி, பிரதேசத்தில் டெங்கு மீண்டும் உருவாகாமல் தடுக்க ஒத்துழைப்பை வழங்கவும் - என்றனர். (ஐ-9)



## மன்னாரில் சிறப்பாக நடைபெற்ற உலக சிறுவர் தின நிகழ்வு

மன்னார்,ஒக்.2

உலக சிறுவர் தின நிகழ்வு நேற்று மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் டெனிசியஸ் கனியூட் அரவிந்தராஜ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் உதவி பிரதேச செயலர் எஸ். டிலக்ஸ்சன், கிராம அலுவலர் , அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் கழக சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறுவர்களுக்கு பலா மரக்கன்றுகள் வழங்கப்பட்டதுடன் பிரதேச செயலக வளாகத்துக்குள் மர நடுகை நிகழ்வும் நடைபெற்றது. (ஐ-56)

## கணுக்கேணி பிரதேசத்தின் முக்கிய வீதிகள் சீரமைப்பு

முல்லைத்தீவு,ஒக்.2

முல்லைத்தீவு, கணுக்கேணி பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையினுடைய 2021 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில், கணுக்கேணி வட்டாரத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டது.

இந்த நிதி மூலம் குமாரபுரம் கிராமத்தின் ஐந்தாவது குறுக்கு வீதியின் ஒரு பகுதி மற்றும் கணுக்கேணி கிழக்கு கிராமத்தின் முன்பள்ளி வீதியின் முதலாவது ஒழுங்கை என்பன தார் வீதியாக சீரமைக்கப்பட்டுள்ளன. (ஐ-13)



## பைஸர் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு யாழ்.போதனாவில் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஒக். 2

12 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கான பைஸர் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

நீண்டகால நோய் உடையோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பைஸர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளமுடியும். அத்துடன் மருத்துவர் ஒருவரின் பரிந்துரையின் அடிப்படையில் குறித்த தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-26)



## வடக்கில் இன்றும் மழை தொடரலாம்

கொழும்பு, ஒக். 2

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் இன்றும் மழையுடனான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதற்கமைவாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் உள்ளிட்ட மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய பிரதேசங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-4)

## நீர் இணைப்புக்களை வழங்கும் நடமாடும் சேவை பூநகரியில்

கிளிநொச்சி, ஒக். 2

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடா கிராம அலுவலர் பிரிவில் வசிக்கின்ற மக்களுக்கான புதிய நீர் இணைப்புக்களை வழங்கும் நடமாடும் சேவை எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்தில் அதிகளவு தண்ணீர்ப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த நிலையில் பூநகரி பிரதேசத்துக்கான குழாய் வழிநீர்வழங்கும்செயற்பாடுகளை விரைவுபடுத்தி மேற்கொண்டுவரும் வகையில் இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

எனவே மேற்படி கிராம அலுவலர் பிரிவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் வீடுவீடாக வருகைதந்து புதிய நீர் இணைப்புக்கான விண்ணப்பப் படிவங்களை பொது மக்களுக்கு வழங்கவுள்ளனர். இது தொடர்பில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் 0212283981 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட பொறியியலாளர் செ.சாரங்கன் அறிவித்துள்ளார். (ஐ-214)

## வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் விநியோகம்

சாவகச்சேரி,ஒக். 2

தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி அலகால், பிரதேசத்தில் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபட்டுவரும் ஆயிரத்து 620 பேருக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் தலா 3 பயனாளிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, முதல் கட்டமாக ஆயிரத்து 620 கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன.

இதேவேளை - தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்தோட்டப் பயனாளிகளுக்கு ஏற்கனவே விதைப் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் இந்தக் குடும்பங்களுக்கு பழமரச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் மரக்கன்றுகளும் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகை பிடிப்போருக்கு

# கொரோனாவால் 80 வீதம் பாதிப்பு

கொழும்பு, ஒக். 2

புகை பிடிப்போருக்கு 80 வீதம் கொரோனாத் தொற்றுப் பாதிப்பு ஏற்படும். இதனால் அவர்கள் உயிரிழக்கவும் வாய்ப்பு உள்ளது என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் கொரோனாத் தொற்றுப் பாதிப்புத் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் பிரிட்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், பிரிஸ்டல் பல்கலைக்கழகம் மற்றும் நொட்டிங்ஹாம் பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

புகை பிடித்தால் இதயநோய், புற்றுநோய் உள்ளிட்ட பிற நோய்கள் ஏற்படுவதைப் போன்றே கொரோனாவும் ஏற்பட வாய்ப்பு அதிகளவில் உள்ளது. புகை பிடிக்காதவர்களுடன் ஒப்பிடுகையில் புகை பிடிப்போருக்கு 80 வீதம் பாதிப்பு ஏற்படும் என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# முக்கொம்பன் கிராமத்துக்கான பஸ் சேவையை ஏற்படுத்தவும்

அப்பகுதி மக்கள் கோரிக்கை



**கிளிநொச்சி, ஒக். 2**

**கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகத் தடைப்பட்ட கிளிநொச்சி கந்தபுரம் ஊடாக முக்கொம்பன் கிராமத்துக்கான பஸ் சேவையை மீண்டும் ஏற்படுத்தி தரவேண்டும்** என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கந்தபுரத்துக்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதி மூன்று இடங்களில் பெருங்குழிகள் உருவானதன் காரணமாக அக்கராயனில் இருந்து யாழ்ப்பாணம் வரை நடைபெற்ற பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டது. குறித்த வீதியின் குழிகளை மூடுமாறு மாவட்டச் செயலர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் உட்பட பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கராயன் பிரதேச பாடசாலைகளுக்கு வருகை தருகின்ற ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் குறித்த வீதி விரைவாக சீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும் மூன்று மாதங்கள் கடந்தும் குறித்த குழிகள் மூடப்படாமல் உள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர் . (ஐ-13)

# ஆள்பதிவு அலுவலகங்கள் திங்கள் முதல் வழமைக்கு

கொழும்பு, ஒக். 2

பத்தரமுல்லவில் உள்ள ஆள்பதிவு தலைமை அலுவலகம் உட்பட அனைத்து மாகாண அலுவலகங்களும், எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை முதல் திறக்கப்படும் என்று ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஜெனரல் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

அதேவேளை தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான ஒருநாள் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பிரதேச செயலகம் ஊடாக அடையாள அட்டைப் பிரிவின் மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கேற்ப விண்ணப்பதாரரின் தனிப்பட்ட முகவரிக்கு, அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டு, தபால் மூலம் அனுப்பப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# ஆபத்தான சூழ்நிலை மீண்டும் ஏற்படலாம்

கொழும்பு, ஒக். 2




எதிர்காலத்தில் மீண்டும் ஆபத்தான சூழ்நிலைகள் ஏற்படலாம் என்று சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்திர தெரிவித்துள்ளார்.

நாடு மீண்டும் திறக்கப்பட்டாலும், மக்கள் தொடர்ந்து அடிப்படை சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். இல்லையென்றால், எதிர்காலத்தில் ஆபத்தான சூழ்நிலைகள் மீண்டும் ஏற்படலாம். அதேவேளை தடுப்பூசி பெறாதவர்கள், அருகில் உள்ள தடுப்பூசி மையங்களுக்குச் சென்று, தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# மகாத்மா காந்தி காட்டிய பாதை!



**சிவரம்யா சிவநாதன்**
**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்**

மகாத்மா காந்தியடிகள் என்றவுடன் எமக்கு அன்பு தழுவிய முகமும் எளிமையும் நினைவுக்கு வரும். இந்திய தேசம் கடந்து எம் நாட்டிலும் பெரியவர் காந்தியின் சிறப்புகள் எல்லோரும் அறிவோம். வெறுப்புக்கு மாற்றாக அன்பு, போட்டிக்குப் பதில் ஒத்துழைப்பு, தன்னலத்துக்கு எதிராகத் தியாகம், புற ஆரவாரத்துக்கு இடமில்லாத எளிமையான அகநாகரிகம் என்பவை காந்திய வாழ்க்கைப் பண்புகள்.

போட்டியும் அதர்மமும் துன்பங்களும் மலிந்த தற்கால உலகில் காந்தி கூறிய கற்பித்த பாடங்கள் நல்லவையே. நேர முகாமைத்துவத்தை உறுதியாக தன் வாழ்வில் கடைப்பிடித்தார்.

தனது ஆச்சிரமத்தில் உரிய நேரத்தில் வேலைகள் பிரார்த்தனைகள் என்பனவற்றை சரியான நேரத்தில் செயற்படுத்தினார். ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை தாமே புரியவேண்டும் என்று கூறியவர். எப்போதும் சஞ்சலமடையாத உறுதியான தோல்வியடையாத மனோசக்தி பெற வேண்டும் என்று வாழ்ந்து காட்டினார். அடைவதற்கு கொள்ளும் ஆர்வமே வாழ்க்கை தன்னைத்தானே அறிவதற்கான பூரணத்துவத்தை அடையப் பாடுபடுவது தான் லட்சியம் ஆகும்.

மக்களோடு மக்களாக இருப்பதுதான் காந்தீயம். மானிடம் என்பது வற்றாத ஜீவநதி.

வெறுப்பை அடிப்படையாகக் கொண்ட நாட்டுப்பற்று கொல்கிறது. அன்பை அடிப்படையாகக் கொண்ட நாட்டுப்பற்று உயிர் அளிக்கிறது. காந்தியடிகள் தன்னம்பிக்கையுடையவர்; இதனால்தான் உலகம் அவரை நம்புகிறது.

சத்தியத்தை விட மேலான மதம் எதுவுமில்லை என்பதே காந்தியடிகளின் கருத்து. என்னைப் பொறுத்தவரை கடவுள் என்பது வாய்மையும் அன்பும் தான். கடவுள் என்பது ஒழுக்க நெறியும் அறவழியும்தான். கடவுள் என்பது அச்சமின்மைதான். கடவுள் என்பது மனச்சாட்சி. நாத்திகவாதியும் இந்தக் கடவுளை மறுக்கமுடியாது என்கிறார் பெரியார் காந்தி.

நாம் வாழ்வில் தீயவற்றை விலக்க நினைப்பது மட்டும் போதாது. விலக்குவதற்கு முழு அளவில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தையும் உறுதி செய்ய வேண்டும். மனிதர்களுக்கு சுயலாபம் சுயநலம் மேலோங்கின் நல்ல விடயங்களை அடைய முடியாது. வெறும் வார்த்தைகளால் மட்டும் நின்றுவிடாது உண்மையாகவே நாம் மகாத்மா காட்டிய பாதையில் வாழ்வோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆபத்து அகலவில்லை!

கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சுமார் 40 நாள்கள் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த (?) முடக்கம் தற்போது நீக்கப்பட்டுள்ளது. நாடு இயல்புக்குத் திரும்பியுள்ளது. போக்குவரத்துக்கள் வழமைபோல் இடம்பெற ஆரம்பித்துள்ளன. ஆனால், கொரோனாப் பெருந்தொற்றின் ஆபத்து எம்மைவிட்டு முழுவதுமாக நீங்கிய பின்னர்தான் இந்த முடக்கநீக்கம் அறிவிக்கப்பட்டுள்ளதா என்றால் நிச்சயமாக இல்லை என்பதுதான் பதிலாக அமையும்.

நாட்டைக் கொண்டுநடத்துவதற்கு நிலவும் நிதிப்பற்றாக்குறை முதல்கொண்டு ஏகப்பட்ட காரணங்கள் இந்த முடக்க நீக்கத்துக்குக் காரணமாக அமைந்தன. ஆதலால், நாம் அனைவரும் பாதுகாப்பான நிலையில் உள்ளோம் என்பதற்கு நிச்சயமாக எந்த உத்தரவாதமும் இல்லை. இதை அரசாலோ அல்லது அதிகாரிகளாலோ மறுத்துரைக்க முடியாது. இந்த அடிப்படை உண்மையை – யதார்த்தத்தை முதலில் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணங்களுக்குக் கட்டுப்பாடு நீடிக்கின்றதே தவிர ஏனைய அத்தனை விடயங்களும் படிப்படியாக இயல்புக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளன. ஒரு வாய்க்கால் வழியாக ஓடிவரும் தண்ணீரை மறித்துவைத்துத் திறந்துவிட்டால் எவ்வாறு அது இன்னும் கூடுதலான வீச்சுடன் புரண்டோடுமோ அவ்வாறு எமது செயற்பாடுகள் அமைந்துவிடுமோ என்ற பேரச்சம் ஆட்கொள்கின்றது. 40 நாள்கள் முடக்கத்துக்குப் பின்னர் வெளியுலகைக் காண்பதற்கு எவ்விதக் கட்டுப்பாடும் இன்றில்லை. இதை ஒரு 'சுதந்திரப்பறவை' போன்ற தோரணையில் எவரும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

நாட்டில் பெரும்பாலானவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டாலும் நோய்க்காவிகள் என்று சொல்லப்படக்கூடிய 18 தொடக்கம் 30 வரையான வயதினர் தடுப்பூசியைப் பெறுவதில் காட்டும் ஆர்வம் திருப்திதரவில்லை. ஆக, இவர்கள் தொடர்ந்தும் நோய்க்காவிகளாக தம் குடும்பத்துக்கும் தாம் சார்ந்த சமூகத்துக்கும் செயற்படக்கூடிய வாய்ப்புக்கள் மிக அதிகமாகவே உள்ளன. எனவே அத்தகையவர்கள் மிகவும் பொறுப்புணர்ந்தவர்களாகச் செயற்பட வேண்டும். இளைஞர்கள் புத்திசாதுர்யமாகச் செயற்படக்கூடியவர்கள். நிலைமையின் தீவிரத்தை உணரக்கூடியவர்கள். அவர்கள் இந்த இக்கட்டான நிலையில் வினைத்திறனுடன் செயலாற்ற வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு.

அத்துடன், அடுத்தடுத்த மாதங்கள் பண்டிகைகளால் நிறைந்தவை. தீபாவளி, கிறிஸ்மஸ், ஆங்கிலப் புத்தாண்டு, பொங்கல் என்று தொடர்ச்சியாக பல பண்டிகைகள் வரவுள்ளன. நாடு இந்தப் பேராபத்தை எதிர்கொண்டமைக்கும், நேற்றுமுன்தினம்வரை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பொதுமுடக்கத்துக்கும் சித்திரைப் புத்தாண்டில் ஏற்பட்ட கொத்தணிதான் முதன்மைக் காரணமாக அமைந்தது. சுகாதாரத் துறையினர் 'புத்தாண்டுக் கொத்தணி' என்று அடையாளப்படுத்தும் அளவுக்கு ஏகப்பட்ட தொற்றாளர்களை சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் உருவாக்கின. அந்த மெத்தனப்போக்கு அடுத்த மூன்று மாதங்களில் எம்மிடத்தில் இம்மியும் இருக்கக் கூடாது. தீபாவளி, கிறிஸ்மஸ், ஆங்கிலப்புத்தாண்டு, பொங்கல் ஆகிய கொண்டாட்டங்களில் நாம் காட்டப்போகும் பொறுமையும் சுகாதாரம் சார்ந்த நடத்தைகளும்தான் அடுத்த பொதுமுடக்கம் வேண்டுமா அல்லது வேண்டாமா என்று தீர்மானிக்கப் போகின்றன.

புத்தாண்டுக் கொத்தணி என்ற ஒன்று எம்மாலேயே உருவாக்கப்பட்டதைப்போல் தீபாவளிக் கொத்தணி, கிறிஸ்மஸ் கொத்தணி, பொங்கல் கொத்தணி என்பன உருவாகாமல் இருப்பதை உறுதிசெய்வோம்.




### உங்கள் பிள்ளைகளுக்கு

# தடுப்பூசியை ஏற்றுவதற்கான சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்!

*குழந்தை மகப்பேற்று நிபுணர் அருள்மொழி வேண்டுகோள்*

**யாழ்ப்பாணம், ஒக். 2**




**12 வயது முதல் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான தடுப்பூசி வழங்கலை மக்கள் தவறவிடக் கூடாது. கொரோனாத் தொற்றுக்குரிய தடுப்பூசியை விசேட தேவையுடையோர் மற்றும் நாள்பட்ட நோயுடையோர், 12 முதல் 20 வயதுக்குட்பட்டோர் இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது இவ்வாறு குழந்தைகள் மகப்பேற்று மருத்துவ நிபுணர் கே.அருள்மொழி தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை நேற்று ஆரம்பித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

12 வயதுக்கு மேற்பட்ட 20 வயதுக்குட்பட்ட நாள்பட்ட நோய் மற்றும் விசேட தேவையுடையோருக்கான பைஸர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையானது இன்று (நேற்று) தொடக்கம் ஒரு வாரத்துக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை, பருத்தித்துறை ஊர்காவற்துறை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனைகள் மற்றும் யாழ். போதனா மருத்துவமனை ஆகிய இடங்களில் தடுப்பூசி வழங்கும் திட்டமானது ஆரம்பமாகி நடைபெறுகின்றது. யாழ். போதனா மருத்துவமனையில் விடுதி 5இல் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

14 வயதினருக்கு மட்டும் இந்தத் தடுப்பூசி வழங்குவதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. ஒரு பொது மருத்துவநிபுணர் அல்லது ஒரு மருத்துவ நிபுணர் ஊடாக வழங்கப்படும் பரிந்துரையின் அடிப்படையில் மிகவும் பாதுகாப்பான முறையாக தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தை மக்கள் தவறவிடாது பிள்ளைகளை அழைத்துவந்து பாதுகாப்பான முறையில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுங்கள் - என்றார்.

(எ-26)

# அவசர சிகிச்சையில் இதுவரையில் 83 பேர்

கொழும்பு, ஒக். 2

கொரோனாத் தொற்றாளர்கள் 83 பேர் இதுவரை அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை சிகிச்சை நிலையங்களில் 382 தொற்றாளர்கள் ஒட்சிசன் உதவியுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று கொரோனா தொடர்பான இணைப்புச் செயலணியின் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.




இதற்கு முன்னர் ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 100ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடுகளை மீறினால் நீண்டகாலம் பாதிப்புக்கள்

## மீண்டும் எச்சரிக்கை



**கொழும்பு, ஒக். 2**
**நாட்டில் நடைமுறையில் இருந்த ஊரடங்கு தளர்த் தப்பட்டுள்ளபோதும், விதிக்கப்பட்டுள்ள கட்டுப் பாடுகளை மக்கள் பொறுப்புடன் கடைப்பிடிக்க வேண்டும். இவற்றை மீறினால் ஏற்படப்போகும் நீண்ட காலப் பாதிப் புக்களைக் கணக்கிட முடியாது போகலாம் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத் துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:
நாட்டில் பெரும்பாலோனார் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட போதிலும் , போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். இல்லாவிடில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கமுடியாது.
கட்டுப்பாடுகள் தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படவில்லை. எனவே அவற்றைப் பின்பற்ற வேண்டும். கடந்த காலங்களில் கொரோனாத் தடுப்பூசி வழங்கல் மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் ஆகியனவற்றால்தான் கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளன.
நாடு நீண்ட நாள்களுக்கு முடக்கப்படுவதன் மூலம் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் மதிப்பிட முடியாதவை. எனவே மக்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார். (ம-4)

# அமைச்சரவையில் மீண்டும் மாற்றம்?

கொழும்பு, ஒக். 2
அமைச்சரவையில் மீண்டும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தேசித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
பெரும்பாலும் வரவு செலவுத் திட்டத்துக்குப் பின்னரே அமைச்சரவையில் மாற்றம் நிகழ்வது வழக்கம். இருப்பினும், அதற்கு முன்னதாகவே அமைச்சரவை முழுமையாக மாற்றியமைக்கப் படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இதற்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் பூரண விருப்பம் வெளியிட்டுள்ளார் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. (ம-4)

# நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு அடுத்த வாரம் நாடாளுமன்றில்



கொழும்பு, ஒக். 2
2022ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு, அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
அடுத்த வாரத்துக்கான சபை அமர்வு எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
அதற்கமைவாக எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை முழு நாளும் வாய்மூல கேள்வி - விடைக்கான விசேட அமர்வாக ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக பல்வேறு காரணங்களால் இதுவரை நாடாளுமன்றில் கேட்கப்படாத வாய்மூல விடைகளுக்காக 40 கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை 2021ஆம் ஆண்டு நடுப்பகுதியின் நிதி நிலைமைகள் தொடர்பான அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## வடமேல் மாகாணசபைத் தேர்தல்

# தயாசிறி விரும்பினால் சு.க.கட்சி சம்மதிக்கும்



கொழும்பு, ஒக். 2
வடமேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஒப்புக்கொண்டால், கட்சி அதற்கு சம்மதம் தெரிவிக்கும் என்று சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி கேட்டுக் கொண்டால் மீண்டும் ஒரு தடவை வட மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கத் தயார் என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார்.
இதற்குப் பதிலளித்துள்ள மஹிந்த அமரவீர,
மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான இறுதி முடிவை அரசே எடுக்க வேண்டும். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி வலுவான முறையில் போட்டியிடத் தயாராக இருக்கின்றது. வடமேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப் போகின்றேன் என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கட்சிக்குத் தெரிவிக்கவில்லை. அவர் போட்டியிட ஒப்புக் கொண்டால், கட்சி அதை அங்கீகரிக்கும் - என்றார். (ம-4)

# சீனி இறக்குமதிக்கான வர்த்தமானி வெளியீடு



கொழும்பு, ஒக். 2
வெள்ளைச் சீனியை இறக்குமதி செய்வதை அனுமதிக்கும், வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.
ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் தமயந்தி கருணாரத்னவின் அறிவித்தலுக்கு அமைவாக, குறித்த வர்த்தமானி வெளியிடப் பட்டுள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக, சுமார் 3 மாதங்களுக்கு வெள்ளைச் சீனி இறக்குமதி இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# திருடர்களைக் காப்பாற்ற அரசு புதியதொரு நாடகம்

## மனுஷ எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 2
தமது பங்காளிகளான திருடர்களைக் காப்பாற்றுவதற்காக, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு தேவையற்றவர்களை அழைத்து விசாரணை மேற்கொள்ளும் நாடகத்தை அரசு அரங்கேற்றி வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.
தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் தரவுகள் அழிக்கப்பட்டமை தொடர்பில் வெளியிட்ட கருத்துத் தொடர்பான விசாரணைக்கு, மனுஷ எம்.பி. குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.
இதன்போது அவர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,
முன்னர் திருடர்களும் மோசடியில் ஈடுபட்டவர்களும் மாத்திரமே குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டனர். ஆனால் இப்போது உண்மையை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.
யாருடைய தேவைக்காக இந்த விடயங்கள் அரங்கேற்றப்படுகின்றன என்று எமக்குத் தெரியாது. ஒரு சில வர்த்தகர்கள் மீதும் திருட்டுகள் பகிரங்கப்படுத்தப்படுவதை வினவுவதற்காக, இங்கு அழைக்கப்படுகின்றனரா எனும் எண்ணம் எமக்கு ஏற்படுகின்றது.
என்.எம்.ஆர் தரவுகளை அழித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்தனர். இதனை வெளிப்படுத்திய எம்மையே இங்கு விசாரணைகளுக்கு அழைக்கின்றனர். நாட்டுக்காக இவற்றுக்கு பதிலளிக்க நாம் தயார். முக்கியத்துவம் வாய்ந்த தரவுகள் இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பின் ஓர் அங்கமாகும். இவற்றைப் பாதுகாப்பதற்கு எம்மால் ஆன ஒத்துழைப்புகளை நாம் வழங்குவோம் - என்றார். (ம-4)

# 5 மாவட்டங்களில் அரிசி ஆலைகள்

கொழும்பு, ஒக்.2
அரிசி விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த, தெரிவு செய்யப்பட்ட 5 மாவட்டங்களில் அரிசி ஆலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
தேவையற்ற வர்த்தமானி அறிவிப்புக்களால் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அரிசி அல்லது நெல்லின் விலையைக் கட்டுப்படுத்த வர்த்தமானி வெளியிடத் தேவையில்லை. வர்த்தமானி அறிவிப்புகளால் இடைத்தரகர்களே பயனடைந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

**மேடம்:** சுபநிகழ்ச்சிகள் சின்ன நெருக்கடிக்கு பிறகு உறுதியாகும். பல நாள் கழித்து உறவினர்களை சந்தித்து பேசி மகிழ்வீர்கள். எதிர்பார்த்து காத்திருந்த வெளிநாட்டு வேலை கைக்கு எட்டக் கூடும்.

**இடபம்:** பணியில் இருக்கும் அழுத்தங்கள் விலகி நிம்மதி வரும். எந்த நன்மையுமே சிறு தாமதத்துக்குப் பிறகு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். நிம்மதியான நாள்.

**மிதுனம்:** எதிர்ப்பாலினத்தினரால் நன்மை பெற வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த விஷயங்கள் ஓரளவுக்கு சாதகமாக இருக்கும். பணத்தேவைகளை நிறைவுசெய்ய கூடுதலாக உழைப்பீர்கள்.

**கடகம்:** தேவையான உதவிகளும், சலுகைகளும் கிடைக்கும். அலுவலகப் பணிகள் எளிதாக முடியும். கவலை ஒன்று தீரும். திடீர் மாற்றங்களை எதிர்பார்க்கலாம். அதிர்ஷ்டம் வரும்.

**சிம்மம்:** பணிச்சுமை காரணமாக பிறரிடம் கடுமை காட்ட வேண்டாம். கலைகளில் ஆர்வம் மேலோங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. சுபச்செலவுகள் ஏற்படும். வெளியூர் செல்வீர்கள். கவலை தீரும்.

**கன்னி:** பலநாள் எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி ஒன்று வரும். உங்களது முயற்சிகளில் படிப்படியான சீரான வளர்ச்சி கிடைக்கும். பெருமிதம் அடைவீர்கள்.

**துலாம்:** உங்களிடம் ஆலோசனை கேட்பவர்கள் பயன் அடைவார்கள். உடன் பிறந்தோரின் பிரச்சினையை கேட்டுத் தீர்வு சொல்வீர்கள். கடமையைக் கவனிப்பீர்கள்.

**விருச்சிகம்:** மற்றவருக்கு உதவி செய்வதற்காக சிறிது விட்டுக்கொடுப்பீர்கள். கடுமையான குணங்களை கைவிடுவது மிகவும் நல்லது. ஆன்மிக ஈடுபாடு அதிகரித்து நிம்மதி ஏற்படும்.

**தனுசு:** எந்த விஷயத்தை செய்வதிலும் பதற்றமோ, அவசரமோ வேண்டாம். தடைகள், தாமதங்கள் பற்றி மன அழுத்தம் வேண்டாம். குடும்பங்களை சேர்த்து வைக்க முயன்று வெல்வீர்கள்.

**மகரம்:** அலுவலகப் பணியைப் பகிர்ந்து முடிக்க வேண்டி வரலாம். சுபவிஷயத்தின் பொருட்டு தூது செல்வீர்கள். பண உதவிகள் உள்ளிட்ட சில விஷயங்கள் தாமதமாகலாம்.

**கும்பம்:** விரைந்து முயன்றாலும் பலன்கள் கிடைக்க தாமதமாகும். கவனமாக செய்யும் விஷயங்கள் நிச்சயமாக பிரச்சினையின்றி முடியும்.

**மீனம்:** எதிர்ப்பாலினத்தினர் மூலம் உதவிகள் கிடைத்து பயன் அடைவீர்கள். மற்றவர் பிரச்சினைகளைப் பேசி சரி செய்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும்.

# கொரோனாத் தொற்று உலகளவில் குறைவு


## உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் தெரிவிப்பு

**வொஷிங்டன், ஒக். 2**

**கொரோனாத் தொற்று உலகளவில் குறைந்து வருகின்றது. அத்துடன் இறப்பும் 10 வீதம் குறைந்து வருகின்றது என்று உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் அதானம் கேப்ரிஜேசஸ் தெரிவித்தார்.**




இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த வாரத்தில் கொரோனா பரவலும், அதனால் ஏற்படும் இறப்பும் உலக அளவில் குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் 30 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த வாரத்தில் கொரோனா பரவும் வீதமும், இறப்பும் 10 வீதம் குறைந்துள்ளது. ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் கொரோனா பரவும் வீதம் குறைந்துள்ளது. மாறாக ஆபிரிக்காவில் அதிகரித்துள்ளது - என்றார். (ம)




சட்டரீதியாக பாதுகாப்பான கருக்கலைப்பை அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கொலம்பியாவில் நேற்றுமுன்தினம் பல நூறு பெண்கள் இணைந்து பேரணியை நடத்தியுள்ளனர். அதில் கலந்துகொண்ட பெண்ணொருவரின் ஒளிப்படமே இது. (ம)

# தென்கொரியாவுடன் வடகொரியா நட்பு!

## தொலைபேசி உரையாடல்களை ஆரம்பிக்குமாறு கிம் உத்தரவு

பியாங்யாங், ஒக். 2
தென்கொரியாவுடன் தொலைபேசி உரையாடல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று வடகொரியா அறிவித்துள்ளது. வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இந்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்கியுள்ளார்.



வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுக்கும், அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கும் இடையில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற பேச்சின் அடிப்படையில் வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் தொலைபேசி வழியான உரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.
எனினும், அதன் பின்னர் அமெரிக்கா வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க மறுத்ததை அடுத்து தென்கொரியாவுடனான உறவை வடகொரியா துண்டித்தது. தற்போது மீண்டும் தென்கொரியாவுடன் இணக்கமாவதற்கு வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தீர்மானித்துள்ளார்.
இதற்கான முதல் கட்டமாக தென்கொரியாவுடன் தொலைபேசிப் பேச்சுக்களை ஆரம்பிக்க அவர் அறிவுறுத்தியுள்ளார். (ம)

# நியூசிலாந்தில் மீண்டும் கொரோனா அதிகரிப்பு!



வெலிங்டன், ஒக். 2
கொரோனாவை முழுவதுமாகக் கட்டுப்படுத்திவிட்டோம் என்று அறிவித்த நியூசிலாந்தில் மீண்டும் கொரோனா படிப்படியாக அதிகரித்து வருகின்றது என்று நியூசிலாந்து சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.
நேற்றுமுன்தினம் மட்டும் 45 பேருக்குப் புதிதாகத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் அதிகமானவர்கள் ஆக்லாந்தைச் சேர்ந்தவர்கள். ஆக்லாந்தில் கடுமையான சுகாதார உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஊரடங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் உரிமையாளர்களுக்கு 50ஆயிரம் ரூபா நிவாரணம்

கொழும்பு, ஒக். 2

**கொ**ரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது

என்று அனைத்து மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் நிலந்த ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைமுறையில் இருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில், பொதுப் போக்குவரத்துச் சேவைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. அதற்கான சுகாதார வழிகாட்டியும் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரை காலமும் போக்குவரத்துச் சேவைகள் முடக்கப்பட்டதால், தனியார் .பஸ் உரிமையாளர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர். இவற்றுக்கு ஈடு கொடுக்கும் வகையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு எதிர்பார்த்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



## முதியோர்களுக்கு நேற்று உணவுப் பொதிகள் வழங்கல்

சாவகச்சேரி, ஒக்.2

சர்வதேச முதியோர்தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் அலகினரால் பிரதேசத்தில் மிகவும் நலிவடைந்த முதியவர்களுக்கு நேற்று உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் ஐந்து முதியவர்களுக்கு பிரதேச செயலரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஏனையவர்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் வீடு வீடாகச் சென்று உலர் உணவுப் பொதிகளை வழங்கினார். (ஐ-9)

## 250 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

சாவகச்சேரி, ஒக். 2

தனிமைப்படுத்தல் ஊரடங்கால் தென்மராட்சி பிரதேசத்தில் தொழில்களை இழந்த 250 குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 1983 க.பொ.த.சாதாரண தர வகுப்பு மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பயனாளிகளிடம் உலர் உணவுப் பொதிகளை வழங்கினர்.

மந்துவில் வரணி , சாவகச்சேரி ,பெரிய அரசடி ,தனன்களப்பு மற்றும் மறவன்புலவு ஆகிய பகுதிகளில் உள்ள சீவல் தொழிலாளர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள் மற்றும் பொருண்மியம் குறைந்த குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-9)



## சர்வதேச சிறுவர் தினத்தில் மரக்கன்றுகள் கையளிப்பு

சாவகச்சேரி, ஒக். 2

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலக தேசிய நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு அலகின் ஏற்பாட்டில் 300 பலா மரக்கன்றுகள் நேற்று வழங்கப்பட்டன. பிரதேசத்தில் உள்ள சிறுவர் கழகங்களின் உறுப்பினர்களுக்கு பலா மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. மரக்கன்று கையளிக்கும் மற்றும் நடுகை நிகழ்வு பிரதேச செயலர் தலைமையில் நேற்று நடைபெற்றது. (ஐ-9)

## திடீர் நலக்குறைவால் மாணவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2

மாணவன் ஒருவர், திடீர் உடல்நலக் குறைபாடு காரணமாக நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கரணவாய், அண்ணாசிலையடியைச் சேர்ந்தவரும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தரம் 11இல் கல்விகற்பவருமான ஜி.கிருஷிகன் என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொரோனாத்தொற்றுக்குள்ளாகி சில நாள்களுக்கு முன்னர் குணமடைந்திருந்தநிலையில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## சுகாதார அலுவலர்கள் கௌரவிப்பு

நாவற்குழி, ஒக். 2

நாவற்குழி கொரோனா இடைநிலைச் சிகிச்சை நிலையத்தில் பணியாற்றுகின்ற 19 சுகாதார அலுவலர்கள் நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டனர்.

சாந்திகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் மற்றும் சாந்திகம் நிறுவனத்தின் பணிப்பாளர் சி.திலீபன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. (ஐ-159)

## பொருள்கள் ..

செய்யப்பட்டுள்ளது.

கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டவுடன், வணிகங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் பொறுப்புடன் செயற்படுகின்றமையை உறுதி செய்ய வேண்டும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நிதி அமைப்பின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கான ஆறு மாதங்கள் வழிகாட்டு வரைபடம் நேற்றுக்காலை இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்ற விழாவில் ஆளுநரால் வெளியிடப்பட்டது.

அதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், அடுத்த ஆறு மாதங்களில் நுண் பொருளாதார மற்றும் நிதி அமைப்புகளின் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்யும் நோக்கில் புதிய பொருளாதாரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நாட்டின் அனைத்து முக்கிய துறைகளையும் உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, பொருளாதாரத்தை பாதித்த கடுமையான டொலர் இருப்பு பற்றாக்குறையின் காரணமாக 623 அத்தியாவசியமற்ற பொருள்களுக்கு கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

எனினும், இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு தற்போது ஐந்து பில்லியன் அமெரிக்க டொலராகியுள்ளது.

கச்சா எண்ணெய் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் வெளிநாட்டு நாணயத்தை சந்தைக்கு வெளியிட எதிர்பார்க்கின்றோம்.

நிதிப்பற்றாக்குறை காரணமாக எரிபொருள் அல்லது எரிவாயு பற்றாக்குறை தொடர்பான சந்தேகங்கள் நீடிக்கக்கூடாது.

ரூ .15 பில்லியன் தொடர்பான அறிக்கை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும்.

பணம் எடுத்துச் செல்ல வெளிநாடுகளுக்குச் செல்லும் நபர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து தொடரும். கல்வி அல்லது உடல்நலக் காரணங்களுக்காக நிதி பெறவிரும்பினால் நிதி வழங்கப்படும்.

அடுத்த 6 மாதங்களுக்குள் தவணை தவறிய வாகனங்கள் உள்ளிட்ட சொத்துக்களை வாங்குவதை நிறுத்திவைக்குமாறு அனைத்து வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு உத்தரவிடப்படும்.

வீழ்ச்சியடைந்த ஆறு நிதி நிறுவனங்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளை எடுக்க மத்திய வங்கி தலையிடும். பண மதிப்பிழப்புச் சட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறு செய்யும்போது உலகளாவிய நிலைமையை அவர்கள் கவனிப்பார்கள் - என்று தெரிவித்தார். (த-இ)

## வவுனியாவில் வீடுடைத்து பணம், நகை திருட்டு

வவுனியா, ஒக். 2

வவுனியா குடியிருப்பு பகுதியில் வீட்டுக் கதவை உடைத்து 3 லட்சம் ரூபா பணம் மற்றும் நான்கு பவுண் நிறையுடைய நகை என்பன திருடப்பட்டுள்ளது.

நேற்றுமாலை வீட்டில் யாருமில்லாதவேளை இந்தத் திருட்டு இடம்பெற்றது.

பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.(த-110)

## சாவகச்சேரியில் தொற்றால் இருவர் சாவு!

சாவகச்சேரி ஒக்.2

சாவகச்சேரி நகரப் பகுதியில் மேலும் இருவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி நேற்று உயிரிழந்தனர்.

மூதாட்டி ஒருவர் மூச்சு விடுவதில் சிரமப்பட்டதால் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் மருத்துவமனைக்கு கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டவேளையில் வீட்டிலேயே உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவரை சிகிச்சைக்கு அழைத்துச்செல்ல முற்பட்டவேளை அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மற்றையநபர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் கொரோனா சிகிச்சை விடுதியில் 14 தினங்களாக சிகிச்சை பெற்றுவந்தநிலையில் உயிரிழந்தார். (த-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கைமுறைக் கருக்கட்டல்

# சிகிச்சையின் படிமுறைகள்



**மருத்துவ நிபுணர் டாக்டர்.சி.ரகுராமன்**
MBBS, MD (Obs&Gny), MRCOG(UK)
சிரேஷ்ட விரிவுரையாளர்,மருத்துவபீடம்,யாழ்ப்பாணம்.
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்தியநிபுணர்,
யாழ் போதனா வைத்தியசாலை.




**1.முட்டையை விருத்தியடையச் செய்தல்**
**(Ovulation idnuction)**

அடிப்படைச் சிகிச்சைமுறையை விட அதிகூடிய எண்ணிக்கையிலான முட்டைகளைக் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் சரியான மருத்துவக்கண்காணிப்புடன் சூலகத்தில் விருத்தியடையச் செய்தல் இந்தச்சிகிச்சையின் முதற்கட்டமாகும். முட்டைவிருத்தியைத் தூண்டும் மருந்துகள் பொதுவாக ஊசி மூலமாக வழங்கப்படும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்கைகளில் FSH, LH போன்ற ஹோமோன்கள் ஊசிமருந்துகளாகப் பயன்படுத்தப்படும். இந்த ஊசிமருந்துகள் மாதவிடாய் ஏற்பட்டு 2 ஆம் நாளிலிருந்து ஏற்றப்படுவதுடன், முட்டைவிருத்தியானது ஸ்கான் மற்றும் குருதியிலுள்ள Oestrogen ஹோமோன் அளவின் அடிப்படையிலும் கண்காணிக்கப்படும்.

இந்தச் சிகிச்சையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கும், கட்டுப்படுத்தப்பட்ட அளவில் முட்டைகளை விருத்தி செய்வதற்கும் மேற்குறிப்பிட்ட இந்த மருத்துவக் கண்காணிப்புகள் உதவுகின்றன. மிக அரிதாகவே மிகஅதிகமான எண்ணிக்கையில் முட்டைவிருத்தியானது தூண்டப்படும் நிலைமை (Ovarian Hyper Sitmulation Syndrome OHSS) ஏற்படுவதுடன். இந்த் நிலைமை உடலில் ஏற்படும் சில மாற்றங்கள் மற்றும் ஸ்கான் ஊடாகக் கண்காணிக்கப்படும். (தொடர்ச்சியான வயிற்றுவலி, வாந்தி, தலைச்சுற்று, இரத்தக்கட்டிகள் வெளியேறல் போன்றவற்றை உடலில் ஏற்படும் மாற்றங்களாகக் குறிப்பிடலாம்.) அவ்வாறு ஏற்படின் மருத்துவர் அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்வார்.



குழந்தையின்மைக்கான விளக்கங்களும் தீர்வுகளும்

**2.முட்டையை எடுத்தல் (Ovum retrievel)**

ஸ்கான் மற்றும் குருதியிலுள்ள Oestrogen அளவு போன்ற பரிசோதனைகள் மூலம் முட்டை விருத்தியானது உறுதி செய்யப்பட்டவுடன்,அண்ணளவாக 14-16 ஆம் நாளில் பெரும்பாலும் பூரண மயக்கத்தின் பின்னர் ஸ்கான் வழிகாட்டலுடன் சூலகத்தில் விருத்தியடைந்த முட்டைகள் எடுக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் பகுதி மயக்கத்தின் மூலமும் (sedation) முட்டையை எடுக்கமுடியும். இது ஒரு பாதுகாப்பான எளிய சத்திர சிகிச்சையாகக் காணப்படுவதுடன் பெரும்பாலும் பிரச்சினைகளை ஏற்படுத்துவதில்லை. ஆயினும் மிகஅரிதான சில சந்தர்ப்பங்களில் கிருமித் தொற்று,குருதிப்போக்கு போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதுமுண்டு. அவ்வாறு ஏற்படும் சந்தர்ப்பங்களில் இதற்கான தீர்வுகள் மருத்துவ நிபுணரினால் வழங்கப்படும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முட்டை எடுக்கப்பட்டு 68 மணித்தியாலங்களின் பின்னராக பெண்கள் வீடுசெல்லமுடியும்.

**3. விந்துகள் பெறப்படும் முறை (sperm retirvel)**

விந்துகள் சுய இன்பம் மூலம் பெறப்படுவதுடன், சுய இன்பம் கடினமாக உள்ள ஆண்களில் சிலதூண்டும் கருவிகளின் உதவியுடன் (vilprator),சுய இன்பம் தூண்டப்பட்டு சுக்கிலப்பாய மாதிரி சேகரிக்கப்படும். மிகக் குறைவான விந்துற்பத்தி உள்ளவர்கள் மற்றும் விந்துகள் பின்னோக்கி சிறுநீர்ப்பையினுள் கடத்தப்படுபவர்களிலும் ஊசி முறை மூலமாக விதை மற்றும் விதை மேற்றிணிவிலிருந்து விந்து மாதிரிகள் சேகரிக்கப்படலாம்.

**இந்த நுண்சத்திர சிகிச்சைகள் மயக்கமருந்துகளின் உதவியுடன் சனனி மற்றும் சிறுநீரகசத்திர சிக்சை நிபுணர்களின்** வழிகாட்டலில் மேற்கொள்ளப்படும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்தச் சத்திரகிச்சைகள் பிரச்சினைகள் ஏற்படுத்துவதில்லை. எனினும் அரிதாகக் கிருமித்தொற்று, வலி, இரத்தப்போக்கு போன்றன ஏற்படும். இந்தச்சந்தர்ப்பங்களில் அதற்குரிய தீர்வுகள் உடனடியாக மருத்துவர்களால் மேற்கொள்ளப்படும்.

**4. ஆய்வு கூடத்தில் கருக்கடலும் வளர்த்தலும்**
**(Fertilization and embryo culture)**

முட்டைகள் சூலகத்திலிருந்து எடுக்கப்பட்டு முதிர்ச்சிநிலை மற்றும் தரம் போன்றன ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்பட்டு, முதிர்ச்சியடைந்த தரமான முட்டைகள் சிகிச்சைக்குத் தெரிவுசெய்யப்படும். சுக்கிலப்பாய மாதிரியிலிருந்து விந்துகள் தனிமைப்படுத்தப்பட்டுத் தயார் செய்யப்படும்.

ஆய்வுகூடத்தில் கருக்கட்டல் முறையானது பொதுவாக இருவகைகளில் மேற்கொள்ளப்படும். முதலாவது, பாரம்பரிய முறையான IVF ஆகும். இதன்போது தரமான, அசையும் தன்மையுள்ள விந்துகள் தெரிவுசெய்யப்பட்டு வளர்ப்பூடகத்தில் முட்டையுடன் பேணப்படுவதன் மூலம் கருக்கட்டப்படுகின்றது. இரண்டாவது, நவீன ICSI முறையாகும். இதன்போது தரமான,அசையும் தன்மையுள்ள ஒரு விந்தணுவானது தெரிவுசெய்யப்பட்டு முட்டையினுள் செலுத்தப்படுவதன் மூலம் கருக்கட்டப்படும். தம்பதியினரில் காணப்படும் பிரச்சினைகள் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட முறைகளில் ஒன்று தெரிவுசெய்யப்படும். ஆயினும் ,தற்போது பெரும்பாலான ஆய்வுகூடங்களில் ICSI முறையே பயன்டுத்தப்படுவதுடன், இது IVFஐ விடக் கருக்கட்டல் வீதம் கூடியமுறையாகக் காணப்படுகின்றது.

பின்னர் கருக்கட்டல் நடைபெற்றதை ஆய்வுகூடத்தில் உறுதிப்படுத்தப்பட்டு உருவாகும் கருவானது,வளர்ப்பூடகத்தில் சிறப்பான சூழ்நிலைகளில் (incubatorனுள்) 5 நாள்கள் வரை வளர்க்கப்பட்டதன் பின்னர் கருப்பையினுள் மாற்றீடு செய்யத் தயாராகக் காணப்படும்.





**5. கருவை கருப்பையினுள் இடம் மாற்றுதல்**
**(Embryo transfer)**

கருவானது கருப்பைக்கு மாற்றப்படுவதற்கு 5 நாள்களுக்கு முன்னராகவே, கருப்பையானது ஹோமோன்களினால் கரு உட்பதித்தலுக்காகத் தயார் செய்யப்படும். இவை (குறிப்பாக Progesterone) இயற்கையான கருவளர்ச்சிக்காக உடலில் சுரக்கப்படும் ஹோமோன்களாகும். இவற்றைச் சிகிச்சையின் போது வெளியிலிருந்து வழங்குவதன் மூலம் சரியான கருவளர்ச்சிக்கேற்ற சூழ்நிலையை கருப்பையில் உருவாக்க உதவும். இந்த ஹோமோன்கள் ஊசி மூலமாக அல்லது குளிசை மூலமாக வழங்கப்படும் .

இவை ஆரோாக்கியமான கருஉட்பதித்தல் மற்றும் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. எனவே தொடர்ச்சியாகச் சரியான முறையில் மருத்துவரின் பரிந்துரைகளின்படி பயன்படுத்துதல் அவசியமாகும்.

கருப்பை கருஉட்பதித்தலுக்காகத் தயார்செய்யப்பட்ட பின்னர் கிருமித் தொற்றுநீக்கம் செய்யப்பட்ட சூழ்நிலைகளில் கருவானது கருப்பையினுள் இடம் மாற்றப்படும். கரு இடம்மாற்றல் செயற்பாடானது IUI போன்று சிறிய குழாயினால் (catheter) கருப்பை வாயிலினூடாக ஸ்கான் வழிகாட்டலுடன் இடம்மாற்றப்படும் செயற்பாடாகும். கருப்பையினுள் இடமாற்றம் செய்யும் முன்னராக கருவின் வெளிப்புறத்தில் சிறிய துவாரம் ஒன்று லேசர் தொழினுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்டு (hatching) கருஉட்பதித்தல் செயன்முறை எளிதாக்கப்படும். முதிர்வடைந்து கருப்பையினுள் இடம்மாற்றத்துக்குத் தயாரான கருவிலுள்ள மரபணுப் பிரச்சினைகளைக் கண்டறிவதற்கான முறைகளும், தொழிநுட்ப வசதிகளும் தற்போது காணப்படுகின்



றன. இந்தக் கருவிலிருந்து எடுக்கப்பட்ட சில கலங்களில் உள்ள பரம்பரையலகு மற்றும் மரபணுதொடர்பான நோய்கள் மரபணுவியலாளர்களால் கண்டறியப்படும். குடும்பங்களில் பரம்பரை சம்பந்தமான நோயுள்ள தம்பதியினர்,தொடர்ச்சியாக கருச்சிதைவு நடைபெறும் தம்பதியினர்,மற்றும் வயது கூடிய தம்பதியினருக்கு இம்முறை மிகப் பொருத்தமானதும்,அறிவுறுத்தத்தக்கதுமாகும்.

**6. கருவை உறைநிலையில் வைத்தல்**
**(Embryo Cryopreservation)**

மிகுதியாகக் காணப்படும் கருக்கட்டப்பட்ட கருக்கள்,முட்டைகள்,விந்துகள் உறைநிலையில் நீண்டகாலம் சேமிக்கப்படுகின்றன.இவை பிற்காலத்தில் மீண்டும் செயற்கை முறைக் கருக்கட்டல் சிகிச்சை தேவைப்படின் சிகிச்சைப் படிநிலைகளைக் குறைந்த செலவிலும் ,குறைவான படிநிலைகளுடனும் செய்ய உதவும். திரவநிலை நைதரசன் (liquid nitrogne) உதவியுடன் உறை வெப்பநிலையில் பொருத்தமான சூழ்நிலையில் சரியான தொடர்ச்சியான கண்காணிப்புகள் மூலம் உறைநிலையில் கருக்கள் அல்லது முட்டைகள் அல்லது விந்துகள் பாதுகாக்கப்படும். உறைநிலையில் பேணப்படும் கருக்களில் தொற்றுநோய்ப் பரிமாற்றங்களோ அல்லது பிறப்புக் குறைபாடுகளோ அல்லது மரபணுக்குறைபாடுகளோ ஏற்படுவதாக விஞ்ஞானரீதியில் உறுதிப்படுத்தப்படவில்லை. இவை ஒப்பீட்டளவில் பாதுகாப்பான செயற்பாடுகளாகவே காணப்படுகின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முட்டாளுக்கு புத்தி சொல்வது வீண்

ஒரு காட்டில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன. குளிர்காலத்தில் ஒருநாள் மிகவும் கடுமையான குளிராக இருந்தது. குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை. கொஞ்சம் நெருப்பு கிடைத்தால் சருகுகளைப் போட்டுத் தீமூட்டி குளிர்காயலாம் என்று ஒரு கிழக்குரங்கு கூறிற்று.
நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக்கொண்டிருந்தபோது ஒரு மின்மினிப் பூச்சி பளிச் பளிச் சென்று மின்னியவாறு பறந்து சென்று கொண்டிருந்தது. அதைக்கண்ட ஒரு குரங்கு அதோ நெருப்பு போகிறது என்று கூறியது. மற்றொரு குரங்கு அந்த மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது.
மற்ற குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூழங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சிமீது போட்டன.
பிறகு குரங்குகள் நெருப்பு கொழுந்து விட்டு எரியப் போகிறது என எதிர்பார்த்து சூழ்ந்து அமர்ந்து கொண்டன. ஆனால் தீ எரியும் வழியைக் காணவில்லை.
பின் குரங்குகள் வாயினால் குப்பையை ஊதி நெருப்பை எரிய விடும் முயற்சியில் ஈடுபட்டன.
மரத்தில் அமர்ந்து குரங்குகளின் கோமாளிக் கூட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பறவை கலகலவென்று சிரித்தபடி மரத்தை விட்டிறங்கி கீழே வந்து அமர்ந்தது. பிறகு குரங்குகளை நோக்கி நண்பர்களே மின்மினிப் பூச்சியை நெருப்பு என்று எண்ணிக் கொண்டு தீ மூட்ட வீண் பிரயாசை எடுக்கிறீர்கள்,
நீங்கள் என்னதான் வாயால் ஊதினாலும் மின்மினிப் பூச்சியிடமிருந்து நெருப்பு வரவே வராது. வீண்வேலையை விட்டுவிடுங்கள் என்று புத்திமதி கூறிற்று.
உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக்கொண்டு உன்வேலையைப் பார் என்று கூறிவிட்டு குரங்குகள் மறுபடியும் குப்பையை வாயால் ஊதித் தீ உண்டாக்க முயற்சியெடுத்தன.
பறவை, குரங்குகளின் முட்டாள்தனத்தை எண்ணிப்பரிதாபப்பட்டு திரும்பத் திரும்ப குரங்குகளுக்கு புத்திமதிகூறிக் கொண்டிருந்தது. இதனால் கோபமுற்ற குரங்குகள் பறவை மீது பாய்ந்து அதனைப் பிடித்து தரையில் மோதிக் கொன்று விட்டன.

**நீதி : முட்டாளுக்கு புத்தி சொன்னால் விளைவு நமக்குதான்**


# கண்டுபிடிப்போம்



கீழே உள்ள குறிப்புகளைக் கொண்டு, சொற்களைக் கண்டுபிடித்து, கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் வரிசைக்கு ஒன்றாக சொற்களை நிரப்பவும். ஒவ்வொரு வரிசையிலும் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள கட்டத்தில் உள்ள எழுத்துகளை எடுத்து ஒன்றாகக் கோர்த்தால் நமது உடலில் உள்ள ஒரு முக்கிய உறுப்பின் பெயர் கிடைக்கும்.

1. இந்த முகத்துடன் வரவேற்றால் விருந்தாளிகள் மகிழ்வர்.
2. இப்படிப் பேசினால் பலரும் அழுதே விடுவர்...
3. கச்சேரிகளில் இது அவசியம் இடம் பெறும்... அதிகமாக அடியும் பெறும்...
4. உடல்நிலை சரியில்லாமல் போனால் இது பார்க்க வேண்டும்...
5. இது சுழன்றால்தான் வண்டி ஓடும்...

## சரியாக வழிகாட்டுவோம்





## நீலக் குருவி

நீலக்குருவி வாலாட்டி நிதம்
நீட்டி முழக்கும்
குரலைக் கேள்!

தாளக் கதியை சீராக்கி அது
தாழப்பறக்கும்
அழகைப் பார்!


வாழைக் குருத்து சுருண்டது போல்
நல் வாகாய் அமைந்த
உடலைப் பார்!

கோலப்புள்ளி வைத்தது போல்
இரு
கொஞ்சும் சிறிய
கண்கள் பார்!

சோளக்கதிரில் உட்கார்ந்து
அது
இரையைக் கொத்தும்
நிறைவைப் பார்!

கவணில் கல்லை
வைத்ததனை
அடிக்கச் சிறுவன்
முயற்சித்தான்!

அதன் அழகை,
குரலைக் கேட்டுக்
கை விட்டான் முயற்சியை
ரட்சித்தான்



# கரையான் புற்று

கரையான் புற்றுகளைப் பார்த்தால் பெரிது பெரிதாக இருக்கின்றன.... கரையான்களோ அளவில் மிகவும் சிறிதாக இருக்கின்றன.
கரையான் புற்றுகளைப் பார்த்தால் பெரிது பெரிதாக இருக்கின்றன.... கரையான்களோ அளவில் மிகவும் சிறிதாக இருக்கின்றன... எப்படி அவ்வளவு பெரிய புற்றுகளைக் கட்டுகின்றன?
இது ஒரு, வாயைப் பிளக்க வைக்கும் அதிசயம்தான். மனிதர்கள் வீட்டைக் கட்டுவதற்கு எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, கரையான் புற்றுக்கள் ஆச்சரியமானவைதான்.
கரையான்களிலும் ராஜா, ராணிகள் உண்டு. இவைதான் ஆரம்பத்தில் புற்றுக்கான அஸ்திவாரத்தைப் போட்டுக் கொடுக்கும். பின்னர் வேலைக்கார கரையான்கள் கூட்டு முயற்சியால் சிறு மரக்குச்சிகள், களிமண், செம்மண் மற்றும் தங்களுடைய எச்சில் ஆகியவற்றைக் கலந்து, குழைத்து புற்றைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுகின்றன.
அந்தப் புற்றுக்குள் சென்று பார்த்தால் நடைபாதைகளும் ராஜா, ராணிக்கென்று பிரத்யேகமான அறைகள் கூட இருக்கும் என்கிறார்கள். உலகிலேயே மிகப் பெரிய புற்று 12 ஆயிரம் டன் மண்ணைப் பயன்படுத்திக் கட்டப்பட்டதாக ஒரு சாதனை இருக்கிறது.



## மகாகவி!



எட்டயபுரத்தில் பிறந்தவர்!
ஏழ்மையில் பலநாள் வாழ்ந்தவர்
மட்டிலா பெரும்புகழ் பெற்றவர்!
மாநிலம் போற்றும் மகாகவி!

பாப்பாவுக்குப் பாடினார்!
பாரதம் உய்ய வாழ்த்தினார்!
தோப்புக் குயிலாய்ப் பாடினார்!
சுதந்திர உணர்வை ஊட்டினார்!

தெய்வ சக்தியைப் பாடினார்!
தேச பக்தியை ஊட்டினார்!
அந்நியர் ஆட்சியை அகற்றவே
அனைவரையும் இசையால் கூட்டினார்!

தோழமை கொண்டு வாழவே
தொண்டு செய்ய வேண்டினார்!
எந்தமிழ் மாகவி பாரதி!
என்றும் வாழ்க வாழ்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

காசாளர் (Cashier)- பெண்(Female)
ஆங்கில அறிவு அவசியம்
வயதெல்லை (18-30)

சாரதி (Driver) - ஆண். யாழ் நகரை அண்டி
வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
வயதெல்லை (18-30)

**உணவு பரிமாறுபவர்** (Waitress)- ஆண்
முன் அனுபவம் உள்ளவர்கள்
விரும்பத்தகது.
வயதெல்லை (18-30)

ஆர்வமுள்ளவர்கள் 02.10.2021 சனிக்கிழமை நேரில் சமுகம் தரவும்.

**தொடர்புகளுக்கு:-**
**Address- U.S Hotel (Pvt) Ltd**
**No.855, Hospital Road,**
**Jaffna.**
**T.P.No: 077 008 3000**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**தோற்றம்** **மறைவு**
**13.05.1941** **02.09.2021**

### அமரர் சிவகுரு சிவபாதசுந்தரம்

அன்னாரின் 31ஆம் நினைவு நாள் இன்று (02.10.2021) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்களுக்கும் தொலைபேசி மூலம் இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் மறைவு
**08.02.1980** **25.09.2019**

### அமரர் துரைராசா ஜெகதீசன் (ஜெகன்)

**திதி: ஏகாதசி (02.10.2021 - சனிக்கிழமை)**

ஆண்டு இரண்டானதோ
எம் குடும்பத் தலைவனைப் பிரிந்து
அன்புடன், பண்புடன் எம்மை வழிநடத்திய
எம் ஆருயிர்த் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

***என்றும் நினைவில்***
**மனைவி-ஜெ.ஜெயந்தா**
**பிள்ளைகள்-ஜெ.கவிலன்**
**ஜெ.கரணிகா**
**மாமா-ச.குணபாலசிங்கம்**
**மாமி- கு.அன்னலட்சுமி**

**கதிர்காம கோவிலடி,**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப் பெண் ஒருவர் தேவை. **077 2626 944**

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 24.09.2021
வெள்ளிக்கிழமை
அமரரான சாதக இளவரசு

### சிவஸ்ரீ சண்முகம்ஐயா சத்தியேந்திரக்குருக்கள்

அவர்களின் ஆன்மா கந்தன் திருவடி நிழலில் இளைப்பாறப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி சிவயோகநாயகி இராமநாதன்**
**ரஞ்சன் செல்லையாபிள்ளை யோகேந்திரன்**
**நமேஷ் யோகேந்திரன்**
**குழகன் யோகேந்திரன்**
**பரம்பரை ஆதீனகர்த்தாக்கள்**
**கந்தவனம் கல்யாண வேலவசுவாமி கோயில்**
**பொலிகண்டி.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்


### திரு.மாணிக்கம் ஜெயக்குமார்

அவர்கள் (30.09.2021) அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம்**
**கோப்பாய்.**

## மரண அறிவித்தல்

**பிறப்பு** **இறப்பு**



**01** **28**
**03** **09**
**1935** **2021**

### திரு வைத்தியலிங்கம் செல்வராஜா

( SENIOR ASSESSOR - DEPARTMENT OF INLAND REVENUE, TAX CONSULTANT )

யாழ். மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொழும்பு சரணங்கர வீதியை வதிவிடமாகவும் கொண்ட திரு வைத்தியலிங்கம் செல்வராஜா அவர்கள் கொழும்பில் காலமானார். அன்னார் திருமதி லலித்தா செல்வராஜாவின் அன்புக்கணவரும் ரஜீவ் செல்வராஜா (USA) சுஜீவா குருஸ் (NEWZEALAND) ஆகியோரின் அன்பு தந்தையாரும் துசாரி, FELIX CROOS ஆகியோரின் அன்பு மாமனாரும் TIFFANY, SHEHANKA, IVANKA, TRAVIN AND JOEL ஆகியோரின் அருமைப்பேரனுமாவார் அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ன VIP மலர்ச்சாலையில் சனிக்கிழமை (02.10.2021) பிற்பகல் 2 மணியளவில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் 4.30 மணியளவில் பொரளை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

**ஓய்வூதியம் ..**

தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சமூக ஊடக ஆர்வலர்களுடன் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொரோனாத் தொற்றுநோயால் ஏற்பட்ட நெருக்கடியை மட்டுமே ஏனைய நாடுகள் எதிர்கொள்கின்றன. ஆனால், கொரோனா காரணமாக ஏற்பட்ட நெருக்கடியுடன் நாமே உருவாக்கிய நெருக்கடி இரண்டுமே நாட்டில் உள்ளது.

மற்ற நாடுகளில் அந்நியச் செலாவணி கையிருப்பு குறையவில்லை. எனினும், நாங்கள் நேபாளத்துக்குக் கீழே இருக்கின்றோம்.

இந்தநிலையில், ஓய்வூதியம் வழங்க அரசிடம் பணம் இருக்காத நிலை விரைவில் வரும். இன்று நாட்டுக்கு அந்நியச் செலாவணி இல்லை. உள்ளூர் வருமானம் இல்லை. முன்பு இதுபோன்ற சூழ்நிலை இல்லை. மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக இந்த ஆண்டுக்கான கடன் 108 சதவீதம் அமைந்துள்ளது. எனினும், நாங்கள் நாட்டை ஒப்படைத்தபோது அது 88.6 ஆக் இருந்தது.

நாங்கள் அரசை ஒப்படைத்துவிட்டுச் சென்றபோது ஏழரை பில்லியன் டொலர்கள் இருப்பு இருந்தது. இன்று கையிருப்பில் இரண்டு பில்லியன் டொலர் மட்டுமே உள்ளது. நாங்கள் பொருளாதாரத்தை மறுசீரமைத்து, கடன் சுமையை குறைத்தோம். சம்பளத்தை அதிகரித்து முதலீட்டாளர்களுக்குத் தேவையான சூழலை மேம்படுத்தினோம்" - என்றார். (த-22)

**வாள்களை ..**

கைவிட்டுத் தப்பியோடியது.

இந்தச் சம்பவம், ஆவரங்கால் வடக்கில் நேற்று மதியம் இடம்பெற்றது.

இரு குழுக்கள் மோதலுக்குத் தயாராக உள்ளன என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இராணுவத்தினர் குறித்த இடத்துக்கு விரைந்தனர்.

குறித்த பகுதியில் 6 மோட்டார் சைக்கிள்களில் தாக்குதல் நடவடிக்கைக்குத் தயாராக இருந்த குறித்த குழுவினர், இராணுவத்தைக் கண்டதும் வாள் மற்றும் கூரிய ஆயுதங்களை கைவிட்டுத் தப்பிச் சென்றனர்.

அதனையடுத்து, அச்சுவேலிப் பொலிஸாரும் இராணுவத்தினரும் குறித்த குழுவினரைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (த-20,27)

## மேசன் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யக் கூடிய மேசன் ஒப்பந்தகாரர் மற்றும் நாட்கூலி மேசன் கூலியாட்கள் தேவை.

தொடர்பு **076 316 5734**

## வீடு வாடகைக்கு

30/19, சைவப்பாடசாலை வீதி, திருநெல்வேலியில் வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. (உத்தியோகத்தர்கள் மட்டும்) தரகர் தேவை இல்லை.

தொடர்பு இலக்கம்: **076 6964669**

## பஸ் சாரதி தேவை

Heavy Vehicle Licence உள்ள CTB இல் ஓய்வுபெற்ற பஸ் சாரதி விரும்பத்தக்கது.

தொடர்பு: **076 810 2805**

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சி நகரத்தில் உள்ள அழகு கலை நிலையத்திற்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

- வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்களும் தொடர்புகொள்ளலாம்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
**076 9466 407, 077 4224 508**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்திய ...

யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களுக்கும் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் தலைதூக்கியுள்ள நிலையிலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அழுத்தங்களுக்கு மத்தியிலும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட பல தரப்புக்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். பல தரப்பினரையும் சந்திக்கவுள்ளார். அதன் பின்னர் திருகோணமலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களுக்கும் அவர் பயணம் மேற்கொள்ளவுள்ளார். (ஒ-5)

### முன்னாள் ..

என்பன போன்ற விவரங்களைத் திரட்டுவதோடு, அவர்கள் வைத்திருக்கும் வாகன இலக்கங்களையும் பெற்றுக் கொள்கின்றனர். கொழும்புக்கு விவரம் அனுப்ப வேண்டும் என்று கூறியே இவ்வாறு விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிலரது வீடுகளுக்கு நேரடியாகவும் சிலருடன் அலைபேசியில் தொடர்புகொண்டும் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இராணுவத்தினர், திடீரென முன்னாள் போராளிகளின் விவரங்களைச் சேகரிப்பதுடன், அவர்கள் பயன்படுத்தும் வாகன இலக்கங்கள் தொடர்பில் தகவல் திரட்டப்படுகின்றமையால் பலர் அச்சமடைந்துள்ளனர் என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (த-10)

### வடக்குக்கு ..

த்தில் முதல் தடவையாக பல மருத்துவமனைகளுக்கு போதுமான அளவு மருத்துவர் நியமனத்துக்கான வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை 63, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை 13, பருத்தித்துறை ஆதார மருத்துவமனை 12, சாவகச்சேரி ஆதார மருத்துவமனை 7, ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை 6, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஏனைய மருத்துவமனைகளுக்கு 28, கிளிநொச்சி 31, மன்னார் 38, முல்லைத்தீவு 28, வவுனியா 48 மருத்துவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (ஒ-5)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 . 04 . 1941 | 01 . 10 . 2021 |

### மயில்வாகனம் இலங்கனாதன்

இணுவில் தெற்கு துரைவீதியை பிறப்பிடமாகவும் கட்சன் றோட் No.69 வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இலங்கனாதன் நேற்று (01.10.2021) பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் சின்னத்தங்கச்சி தம்பதியரின் பாசமிகு மகனும் அருமைநாயகியின் அன்புக் கணவரும் குகாயினி (குகா, ஜேர்மனி) காட்சாயினி (கௌசனா, பிரான்ஸ்) காலஞ்சென்ற டினேஸ்கரன் (குரு) கஜமுகனி (ஜமுனா, பிரான்ஸ்) கோணேஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குருபரன் (குரு, ஜேர்மனி) றமணன் (மதன், பிரான்ஸ்) செந்தில் குமரன் (செந்தில், பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சுப்ரமணியம், காலஞ்சென்ற குலசிங்கம், காலஞ்சென்ற காந்தராசா, மகேஸ்வரி (கலஹா), இரத்தினசிங்கம் (இணுவில்) ஆகியோரின் சகோதரரும் நடராசா (கலஹா) இன் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
ம. இரத்தினசிங்கம்
சகோதரன் - 0773110928

## நாக பூஷணி திருமண சேவை

### இடம் மாற்றப்பட்டுள்ளது

264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு கொக்குவில்
(கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்)

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உயர் பதவியிலுள்ளோர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்.

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்களை மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக் கொள்ளலாம்.

077 138 7596, 071 999 9306

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 . 05 . 1955 | 02 . 09 . 2021 |

### அமரர் இராமசாமி கல்யாணசுந்தரம்

அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளம் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நினைவுகளுடன்....

குடும்பத்தினர்.
077 224 7504

# மரண அறிவித்தல்

## வைத்திய கலாநிதி குமாரவேலு குமாரசூரியர் MD

**குழந்தை வைத்திய நிபுணர்**-Health First Community Health Centre - USA, Priority Primary Care - USA
Annai Music - USA **(ஸ்தாபகர்)**

**(யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவன் - 1982-83 சிரேஷ்ட மாணவ தலைவன்)**



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்கா டென்சியை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தை வைத்திய நிபுணர் குமாரவேலு குமாரசூரியர் அவர்கள் கடந்த (26.09.2021) இல் அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் ஆதீனகர்த்தாக்களாகிய அமரத்துவமடைந்த இ.சரவணமுத்து உடையார் முத்துப்பிள்ளை தம்பதிகள் மற்றும், ப.கந்தசாமி நாகரத்தினம் தம்பதிகளின் அன்புப் பேரனும், அமரர்கள் வைத்திய கலாநிதி ச.குமாரவேலு மகேஸ்வரி தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், ஜோர்ச் பேர்சில் மற்றும் அமரர் மற்றில்டா பேர்சில் (கிறனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், எலிசபெத் குமாரவேலு (வைத்தியசாலை பொறுப்பாளர், Health First Community Centre) அவர்களின் ஆருயிர் கணவரும் மகேசன், ஆனந், திவ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவானந்தன் (பொறியியலாளர், கனடா), சச்சிதானந்தன் (முன்னாள் உதவி முகாமையாளர் BOC, லண்டன்), வைத்திய கலாநிதி குகனாநந்தன், சரவணபவானந்தன் (முன்னாள் கோட்டக் கல்வி பணிப்பாளர், வேலணை), சிவபாதம் (முன்னாள் விவசாய மேற்பார்வையாளர், லண்டன்), இராஜேஸ்வரன் (MRICS, CCE, அமெரிக்கா), கைலாசநாதன் (முன்னாள் வரி அறவீட்டு உத்தியோகத்தர், பிரான்ஸ்), ஞானபூரணி (முன்னாள் போதனாசிரியர் தையல் பயிற்சி நிலையம்), கேதாரபூரணி (முன்னாள் ஆசிரியர் ஞானக் குழந்தை இல்லம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சறோஜினிதேவி (கனடா), பரிமளா (இளைப்பாறிய நீதிமன்ற உத்தியோகத்தர், லண்டன்), ஜெயமலர், நாகரத்தினம் (ஓய்வுநிலை அதிபர், மண்கும்பான்), ரூபராணி (லண்டன்), ஜெயகௌரி (அமெரிக்கா), நகுலேஸ்வரி (ஆசிரியர்-பிரான்ஸ்), ஸ்ரீதரன் (பொறியியலாளர், லங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்), ஞானகாந்தன் (ஓய்வுநிலை அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி), கரோல் பேர்சில் (கிறனடா), இவோன் பேர்சில் (கிறனடா), பிரான்சிஸ் பேர்சில் (கிறனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும், வித்திய சுமங்கலை, நிவேதிதா, நிராகுலன், பவதாரணி, மதுசூதனன், லக்ஷாயினி, நிஷாந்தி, காயத்திரி, அபர்ணா, ஜசித்ரா, ஜனித்ரா, கிரிஷாந், சாரித்ரா, சாயித்ரா, சிவரஞ்சிகா, பரசுதரன், நிரூபிகா, சயந்தன், திவாகர், கேசினி ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், பிரியந்தினி, மதுரந்தினி, சுகபிரதா, சுகவரதா, சிவானுஜன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளும் தகனக்கிரியைகளும் அமெரிக்காவில் உள்ள டென்சியில் 09.10.2021 சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

மலர்வு : 09.02.1963 உதிர்வு : 26.09.2021

**கு.குகனாநந்தன் (சகோதரன்) 077 922 5742**
**கு.சரவணபவானந்தன் (சகோதரன்) 077 1000376**
**ஐ.ஸ்ரீதரன் (மைத்துனர்) 0771717007**
**வே.ஞானகாந்தன் (மைத்துனர்) 076 6809 402**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் ...

கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையில் அண்மையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆற்றிய உரை தொடர்பில் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதற்கெதிராக கோஷங்களும் எழுப்பப்பட்டன.

"இன்று சிறுவர்கள் தினம் இல்லை, கறுப்புத் தினம். அதிகமான சிறுவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ள நிலையில் சிறுவர் தினத்தை நாங்கள் கறுப்பு நாளாகவே கொண்டாடுகின்றோம்." என்று வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்க இணைப்பாளர் சிவபாதம் இளங்கோதை தெரிவித்தார்.

போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வெளியே புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

**வவுனியா**

"5 வயது சிறுவர்களும் ஆயுதம் ஏந்தினார்களா..?" என்று கேள்வியெழுப்பியவாறு காணாமலாக்கப்பட்டவர்களின் வவுனியா உறவுகள், வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

அவர்கள், "5 வயதுக் குழந்தைகளும் ஆயுதம் ஏந்தினார்களா? மரணச்சான்றிதழும் வேண்டாம், இழப்பீடும் வேண்டாம், தமிழ்க் குழந்தைகள் பயங்கரவாதிகளா?, கையில் ஒப்படைத்த குழந்தைகள் எங்கே?, சர்வதேச சிறுவர் தினம் எமக்கு துக்க தினம்!" என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

இதன்போது கருத்துரைத்த அவர்கள், "ஓமந்தைப் பகுதியில் இராணுவத்தினரின் உறுதிமொழியை நம்பி கையளிக்கப்பட்ட எமது குழந்தைகள் காணாமலாக்கப்பட்டு பல வருடங்கள் கடந்தும், நீதி நிலைநாட்டப்படவில்லை. குடும்பம் குடும்பமாக ஒப்படைத்த எங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. பால்குடி குழந்தையைக்கூட தாயுடன் கொண்டு சென்றார்கள். 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் கருத்துக்களை ஏற்க முடியாது. சர்வதேசம் எமக்கான நீதியைப் பெற்றுத் தரவேண்டும்." என்று தெரிவித்தனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் 1669ஆவது நாளாக தொடர்ச்சியாக கவனவீப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் முல்லைத்தீவு , மாங்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

"எங்கே எங்கே உறவுகள் எங்கே?, பன்னாட்டு விசாரணையே எமக்கான தீர்வு, இலங்கை இராணுவத்திடம் கையளித்த எமது சிறுவர்கள் எங்கே?, இழப்பீடும் வேண்டாம் மரணச்சான்றிதழும் வேண்டாம், எமது குழந்தைகளுக்கு உயிர்வாழும் உரிமை இல்லையா?, எங்கள் குழந்தைகள் எமக்கு வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

அதில் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி ம.ஈஸ்வரி,

"புலம்பெயர்ந்த உறவுகளே! உங்களிடம் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றோம். சிலவேளைகளில் இங்கு எமது போராட்டங்கள் முடக்கப்பட்டு, போராடமுடியாத நிலை ஏற்பட்டால், சர்வதேசத்திடம் எங்களுக்காகக் குரல்கொடுத்து எங்களுக்கான நீதியைப் பெற்றுத்தர வேண்டும்.

இன்று கொட்டும் மழையிலும் கொடிய நோய்க்கு மத்தியிலும் வாடிக்கொண்டிருக்கின்றோம். ஆனால், நாளை என்ன நடக்கும் என்று தெரியாத சூழ்நிலையில் எங்களைச் சுற்றிவர பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் பாதுகாப்பு என்ற போர்வையில் எங்களை ஒளிப்படம் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். அந்த அச்சுறுத்தலையும் தாண்டி நாங்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

ஜனாதிபதியின் வாக்குறுதி எங்களை மரணமாக்கி விட்டது. நாங்கள் மரணித்த மாதிரி இருக்கின்றோம். வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழும் இழப்பீடும் வழங்குகின்றோம் என்றுகூறி சர்வதேசத்தை நம்பவைத்து அரசாங்கம் ஒரு நாடகம் ஆடிக்கொண்டிருக்கின்றது.

கொலை செய்தவரிடமிருந்து எந்த நீதியும் கிடைக்காத நிலையில்தான் நாங்கள் சர்வதேசத்தை நாடி நிற்கின்றோம். எங்களுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத் தரவேண்டும். அத்துடன் புலம்பெயர்ந்த உறவுகளும் எங்களுக்கு நீதியைப் பெற்றுத்தரவேண்டும்.

**மன்னார்**

சர்வதேச சிறுவர் தினத்தை காணாமலாக்கப்பட்டவர்களின் மன்னார் உறவுகள் துக்கதினமாக அனுஷ்டித்தனர்.

இது தொடர்பில் மன்னார் சங்கத்தலைவி ஊடக சந்திப்பில் தெரிவிக்கையில்,

அனைத்து இடங்களிலும் சிறுவர் தினத்தை சந்தோஷமாகக் கொண்டாடுகின்றனர். ஆனால் எங்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

எங்களுடைய பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள் தெரியவில்லை. குழந்தைகளைத் தொலைத்துவிட்டு நாங்கள் எப்படி சிறுவர் தினம் கொண்டாடுவது?

எமது பிள்ளைகள் எம்மிடம் கிடைக்கும்வரை எத்தகைய தினமாக இருந்தாலும் சரி, அனைத்துத் தினங்களும் எமக்கு துக்க தினங்களே.

ஜனாதிபதி கூறியிருக்கிறார், எமது பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ் வழங்குகின்றேன் என்று, எமக்கு மரணச் சான்றிதழ் தருவதற்கு அவர் யார்?

மரணச் சான்றிதழுக்காக அவரிடம் கையேந்த வேண்டிய நிலை எங்களுக்கு இல்லை. மரணச் சான்றிதழ் எடுப்பதாக இருந்தால் சத்திய கடதாசியை நிறைவு செய்து மரண சான்றிதழ் எடுக்கலாம். அதற்கான வல்லமையும் வழியும் எங்களிடம் இருக்கின்றன.

அத்தோடு ஜனாதிபதி புலம்பெயர் அமைப்புகளுடன் பேசப் போகிறாராம். அவர் என்ன பேசப்போகிறார்? பாதிக்கப்பட்ட நாங்கள் இங்கிருந்து போராடிக் கொண்டிருக்கின்றோம். புலம்பெயர் அமைப்புகளுடன் அவர் என்ன பேசப் போகிறார்? முதலில் எங்களோடு கதையுங்கள். எங்களுடைய தேவைகளைத் தீர்த்துவையுங்கள். இறந்து போனவர்களுக்காக நாம் போராடவில்லை. உயிரோடு உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்காகவே போராடுகிறோம். - என்றார்.

**கிளிநொச்சி**

உறவுகளை ஒப்படைத்து காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களை நினைவுகூரும் தினமாக அன்றி, காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி நிற்கின்ற தினமாகவே இந்தத் தினத்தைப் பார்க்கின்றோம் என்று வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்தார்.

சர்வதேச சிறுவர் தினம் உலகில் கொண்டப்பட்ட நிலையில் நாங்களும் எங்களுடைய பிள்ளைகளுடன் இந்த சிறுவர் தினத்தை கொண்டாட விருப்பம்தான். ஆனால், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ள எங்களுடைய பிள்ளைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்- என்று அவர் தெரிவித்தார்.

(த-20,26,19,246,110,213,56,18,6)

## கொரோனா ...

இவ்வாறு தெரிவித்தார், கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும் மக்களின் பொறுப்பான செயற்பாடுகளே ஒக்ரோபர் மாதத்தின் நிலைமையைத் தீர்மானிக்கும்.

ஒரு மாதத்துக்கும் அதிககாலம் நாட்டை மூடி கொரோனாத் தொற்றை ஓரளவு கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டோம்.

மக்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு அவதானமாகச் செயற்பட வேண்டும்.

நாட்டைத் தொடர்ந்து மூடிவைக்க முடியாது. கடந்த காலங்கள் முழுவதுமாக மக்கள் வழங்கிய ஆதரவுக்கமைய தொற்றை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தது.

இந்தக் காலப்பகுதிகளிலும் அதேபோன்று அவதானமாகச் செயற்பட்டால் மாத்திரமே நாட்டை முன்கொண்டு நடத்திச் செல்ல முடியும்.

அதற்கமைய அரச ஊழியர்களின் பணிகள் வழமையான முறையில் நடத்திச் செல்லப்படவுள்ளன. அதே வேளை, அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன"- என்றார். (த-22)

## சாவு 58 ...

புதிய கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 964 ஆக அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 58 பேரில் 27 ஆண்களும், 31 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 9 ஆண்கள், பெண்கள் ஒருவர் என 10 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 48 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 18 ஆண்களும், 30 பெண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை,

இலங்கையில் நேற்று 893 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 18 ஆயிரத்து 775 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 597 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 58 ஆயிரத்து 85 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## உசனில் ...

படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம், நேற்றுமாலை இடம்பெற்றது.

சம்பவத்தில், கிளிநொச்சி, ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் சுரேஸ் (வயது - 40) என்பவரே உயிரிழந்தார். அதே இடத்தைச் சேர்ந்த ஆனந்தன் இளஞ்செழியன் (வயது- 23) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முன்னால் சென்ற பட்டாரக வாகனத்தை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் முந்திச்செல்ல முற்பட்ட வேளை பட்டா ரக வாகனம் திடீரென சிக்னல் போட்டு திரும்பியது என்றும், அதனால் வேகமாகவந்த மோட்டார்சைக்கிள் நிலைதடுமாறி பட்டாவின் பின்பக்கத்துடன் மோதி வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நின்ற மரத்துடன் மோதியதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் மூர்ச்சையானார் என்றும் ஆரம்ப விசாரணையைக்கொண்டு பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-159)

## வெவ்வேறு ...

வீரியத்தை அதிகரித்துக் கொண்டு வைரஸ் பரவலாம். அதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. இவ்வாறான வைரஸ் பரவல்களை உடனடியாக அழித்துவிட முடியாது என்பதை சகலரும் விளங்கிக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் விசேட மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஊரடங்கு மட்டும்தான் நீக்கப்பட்டுள்ளது. நாடு இன்னமும் முழுமையாகத் திறக்கப்படவில்லை. இறுக்கமான கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன.

எனவே, நாடு முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளதென்று நினைத்துக்கொண்டு, மக்கள் வழமை போன்று கொரோனாவுக்கு முன்னர் செயற்பட்ட விதத்தில் செயற்பட முடியாது.

இப்போது வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ளதென்றால் கடந்த ஒன்றரை மாதங்களாகக் கையாளப்பட்ட கட்டுப்பாட்டு விதிமுறைகளே காரண மாகும். ஆகவே, இனியும் சுகாதார வழிமுறைகளை அதிகமாகக் கையாள வேண்டியது நாட்டில் வாழும் சகல மக்களினதும் கடமையாகும். இது தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், ஏனைய சகலரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றிக்கொள்வது தமது உயிர்ப் பாதுகாப்புக்கு இப்போது இருக்கும் ஒரே தெரிவாகும். ஆனால், தடுப்பூசியை ஏற்றிவிட்டோம் என்ற எண்ணத்தில் முகக்கவசம் இல்லாது, சுகாதார வழிமுறைகள் இல்லாது மக்கள் செயற்பட முடியாது." - என்றார். (த-22)

# 'பிளேஓவ்' சுற்றுக்குள் நுழைந்தது சி.எஸ்.கே



**டுபாய், ஒக். 2**

**ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஹைதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்று பிளேஓவ் சுற்றுக்குள் நுழைந்தது சென்னை சுப்பர் கிங்ஸ். இந்தப் பருவகாலத்தில் பிளேஓவ் சுற்றுக்குள் நுழைந்த முதலாவது அணியாக தன்னை நிலைநிறுத்தியது சென்னை சுப்பர் கிங்ஸ்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஹைதராபாத் சண் ரைசர்ஸ் அணியின் ஆரம்ப வீரரான ஜேசன் றோய் வெறும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணித்தலைவர் வில்லியம்சன் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சகா ஒருமுனையில் நிலைத்து நின்று அணியைச் சரிவில் இருந்து மீட்கப்போராடிய போதிலும் பெரியளவில் அவரால் வெற்றி பெற முடியவில்லை. 46 பந்துகளில் 44 ஓட்டங்களைத்தான் சகாவால் பெறமுடிந்தது. அபிசேக் சர்மா 18 ஓட்டங்களையும், அப்துல் சமாட் 18 ஓட்டங்களையும் பெற, முடிவில் 7 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களை ஹைதராபாத் அணி பெற்றது.

பந்துவீச்சில் ஹேசில்வூட் 3 இலக்குகளையும், பிராவோ 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு ஆரம்ப வீரர்களான பிளஸிஸ், ஹெய்க்வாட் வழக்கம்போல மிரட்டலான ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தனர். 10 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் 75 ஓட்டங்களை சென்னை பெற்றது. 45 ஓட்டங்களுடன் ஹெய்க்வாட் ஆட்டமிழந்தார். மொய்ன் அலி 17 ஓட்டங்களுடனும், டுபிளஸி 41 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்பினர். எனினும் ராயுடு, டோனி இருவரும் நிலைத்துநின்றனர். ஆட்டத்தை சிக்சருடன் முடித்தார் டோனி. (ம)



## டோனியின் இறுதி ஐ.பி.எல். இதுவே

### பிராட் ஹாக் தெரிவிப்பு

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவரான டோனியின், இறுதி ஐ.பி.எல். தொடர் இதுவாக இருப்பதற்கு அதிகமான வாய்ப்புக்கள் உள்ளன என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் பிராட் ஹாக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சி.எஸ்.கே. அணியின் தலைவர் டோனிக்கு இந்த ஆண்டு ஐ.பி.எல். சீசன்தான் அவர் தலைவராகவும் வீரராகவும் செயற்படும் கடைசி சீசனாக இருக்கும் என நான் நம்புகிறேன். டோனி தனது துடுப்பாட்டத் திறனை இழந்து விட்டார். இந்த காரணத்தினால்கூட சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இருந்து அவர் ஒதுங்கி விடலாம்.

டோனி துடுப்பெடுத்தாடும் விதத்துக்கும், கால் நகர்த்தும் விதத்துக்கும் பெரிய இடைவெளி இருக்கிறது. 40 வயதான டோனிக்கு தளர்வு வந்துவிட்டது. எனவே இந்த ஆண்டு சீசன் முடிந்தபிறகு டோனி ஐ.பி.எல். போட்டியில் இருந்து ஓய்வை அறிவிக்க வாய்ப்புள்ளது.

இந்திய கிரிக்கெட் மற்றும் சி.எஸ்.கே. அணியின் வளர்ச்சிக்கு டோனியின் தலைமைப் பண்பு மிகவும் நல்லது. ஜடேஜா அணியில் வளர்வதற்கும், இளம் வீரர்களை மேம்படுத்துவதற்கும் டோனி உதவி செய்கிறார் - என்றார். (ம)

ஐ.பி.எல். தொடர்

## புதிய அணிகள் தொடர்பில் ஒக்ரோபர் 25இல் அறிவிப்பு

புதுடில்லி, ஒக். 2

ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கப்போகும் மேலும் இரு அணிகள் தொடர்பில் இந்த மாதம் 25ஆம் திகதி அறிவிக்கவுள்ளது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. இந்த ஐ.பி.எல். தொடருடன் எட்டு அணிகளும் வெகுசில வீரர்களைத் தக்கவைத்துக்கொண்டு பெரும்பாலான வீரர்களை விடுவிக்க வேண்டும்.

அத்துடன் அடுத்த வருடத்தில் புதிதாக இரண்டு அணிகள் சேர்த்துக்கொள்ளப்படும் என்ற அறிவிப்புக்கள் ஏற்கனவே இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் விடுக்கப்பட்டிருந்த நிலையில், அவை எந்த அணிகள் எனும் அறிவிப்பு ஒக்ரோபர் 25ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. (ம)



**பார்மசி விற்பனைக்கு**
மருந்தாளருடன் பதிவு செய்யப்பட்ட பார்மசி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 0124 104

**ஒலிம்பியாட் மற்றும் கணித போட்டி பரீட்சைக்கான வகுப்புக்கள்**
தரம் 6 தொடக்கம் 9 வரையான மாணவர்களிற்கான 3ஆம் மாதத்திற்கான வகுப்புக்கள் Zoom ஊடாக இன்று (02.10.2021) ஆரம்பமாகவுள்ளது. மாத இறுதியில் பரீட்சைகள் நடாத்தப்படும். தொடர்பு: 070 6540 529
Saturday / Sunday } 8.30 PM - 9.30 PM

**விற்பனைக்கு**
பெண் வைத்தியரின் தனிப் பாவனையில் இருந்த Celerio car (2016, Ash color) உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 912 3009

**ACI**
வர்த்தக பிரிவுகள் Zoom மூலம்
Batch-02 A/L 2023
ஆரம்பம் 04.10.2021 (திங்கள்) 10.00மணி
கணக்கீடு-வி.தமிழ்ஈசன்
பொருளியல்-M.லிஜிதன்
வணிகக்கல்வி-B.கோபிதன்
அனுமதிகளுக்கு: 076 8066 960
(கொக்குவில் சந்தி அருகாமை)

**விரைவு பொதிகள் சேவை**
உள்நாடு - 24 மணித்தியாலத்திலும்
வெளிநாடு - 72 மணித்தியாலத்திலும்
ஒப்படைக்கப்படும். (நிபந்தனைக்குட்பட்டது)
U.K Over 11Kg - 1000/=
"Pickup Service உண்டு" [வேலையாட்கள் தேவை]
Lanka Cargo Worldwide Express
315, Kasthuriyar Road, Jaffna.
Hotline - 076 2832 397, 070 3750 002.

**வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை.
1. விற்பனை பிரதிநிதி (Sales Representative)
2. விற்பனை உதவியாளர் (Sales Assistant)
3. கணக்கு உதவியாளர் (Account Assistant)
தொடர்பு: 076 137 9330

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் - காரைநகர் வீதியில், ஓட்டுமடம் சந்தியில் இருந்து 500 M தூரத்தில் 20 அடி பாதையுடன் 24 பரப்பு காணி விற்பனைக்கு இரண்டு பரப்பாக பிரித்து வழங்கப்படும். (யாழ் மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 2 KM தூரம்)
076 221 2037, 077 288 0152, 076 734 1023

**காணி விற்பனைக்கு**
தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன். பரப்பு 6 இலட்சம் ரூபாய்.
பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.
077 814 7389, 077 614 7333

**TECHNO WORLD**
**தொழில்நுட்பக் கல்லூரி**
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)
**A/L 2023 தொழினுட்ப பிரிவு**
- பொறியியல் தொழில்நுட்பவியல்.
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்.
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
- I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம் (7), சித்திரம்.

A/L 2021,2022 and Day class மாணவர்களுக்குரிய Zoom online class நடைபெறுகிறது
A/L 2023 ஆரம்பம் 03.10.2021
புதிய பிரிவு 2
ஆரம்பம் 8.30 am, Zoom online class
முற்றிலும் இலவசம்
திங்கள் முதல் ஞாயிறு காலை 10 முதல் 2 மணி வரை அனுமதிகளை நேரடியாக வந்து அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
Call Now: 0770175346

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.